மார்ச் 2006

# தமிழர் தகவல்

இலண்டன்

## Tamils' Information




மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest

இலண்டனில் தரமான தங்கத்திற்கு

# Lakshmis Jewellers



276 High Street North London E12 6SA U.K
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

# தமிழர் தகவல் Tamils' Information

மார்ச் 2006 | மலர் : 03 | இதழ் : 33


" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." - குறள்

## சுகம் தரப்போகும், துன்பங்கள் !

மீண்டும் இதே பந்தியில், எழுதிய கருத்துக்களையே ஞாபகப்படுத்துகிறோம்; புலம் பெயர்வாழ் தமிழினம் புரிந்து கொள்ளுமென்ற நம்பிக்கையுடன். ஜெனீவா என்பது ஜெருசேலமல்ல, கைதட்டுவதற்க்கு அல்லது கல்லெடுத்து எறிவதற்கு. அங்கிருந்து இலங்கை மீண்ட அரச அணியினர் வெளியிட்டுவரும் கருத்துக்கள் அர்த்தமற்ற அவர்களின், அரசியல் அறிவின் அரை அவியல்களை வெளிபடுத்துகின்றன - விளம்பரமாகவும் உள்ளன. இனியும் தமிழ் இனத்தை இழுத்தடிப்பில் ஏமாற்றலாம் என்ற நினைப்பு சிங்கள இனத்துக்கு இருக்குமானால் அதற்காக அவர்கள் வருத்தப்பட்டுத்தான் ஆகவேண்டும். அது தவிர்க்கமுடியாத காலத்தின் கட்டாயம்.

சுவிஸ் நாட்டுத் தமிழரிடை பேசிய 'கேணல் ஜெயம்' மிக ஆழமாக அதைத் தெளிவுபடுத்துகிறார். புலிகள் போராளிகள் மாத்திரமே எனப் புலம்பிக் கொண்டிருப்பவர்களுக்கு இது புரியப்பட வேண்டும். எவ்வளவு தெளிவாக எதிர்கால வரலாற்றின் பரிமாணங்களை அவர் உகித்திருக்கிறார். துப்பாக்கி ஏந்திய வீரனை சிந்தனையில் பக்குவப்படுத்தி வைத்திருக்கும் எங்கள் தேசியத் தலைமையை எப்படிப் பாராட்டுவது? இது போன்ற நம்பமுடியாத நகர்வுகள் தான் நம்மை சிலிர்க்க வைக்கின்றன. "யுத்தத்தின் ஊடாக எங்கள் விடுதலையை வென்றெடுக்க வேண்டிய தேவையுள்ளது" என்று புலம்பெயர்ந்த தமிழ்பெருங்குடிகளிடையே ஜெயம் பேசி இருப்பது அரை நூற்றாண்டு அல்லல்களுக்கு முடிவுகட்டும் ஒரு வழிகாட்டுதல் என்றே எண்ணுகிறோம். சிந்தனை வளர்ச்சியென்பது தமிழீழத்துக்கு வறுமைப்பட்டதல்ல என்பதுதான் இதன் வெளிப்பாடு.

பத்தொன்பது ஆண்டுகட்கு முன், ஒரு பதற்றமான காலகட்டத்தில், முதிர்ச்சியான இராணுவம் ஒன்றுடன் புலிகள் மோத வேண்டிய சூழ்நிலையின் ஆரம்பகட்டத்தில், ஒரு சாதாரண மனிதனாக அந்தப் போராளியிடம் கேள்விகள் கேட்கிறேன்; அட்டகாசமான வழமைச் சிரிப்புடன் அவனிடமிருந்து பதில் வருகிறது. "மறைக்கப்படுவதும், தணிக்கப்படுவதுமான மாற்றங்களின் பின் வரும் மக்கள் எழுச்சியின் பின் 'தமிழீழம்' மலரும்" என்கிறான். "நான் அதைப் பார்க்க மாட்டேன். நீ சிலவேளை இருப்பாய் அண்ணே!" என்ற அந்த தியாகத் தீபத்தின் நினைவுகளில்-கண்களில் நீர் கோர்க்கக் கணப்பொழுதில் கலங்குகிறேன். மீண்டும் கண்களைத் திறக்கும் போது 'கேணல் ஜெயம்' தெரிகிறார். கோட்பாடுகளில் தான் போராளிகளிடம் ஒற்றுமை என்றால் சிந்தனையில் கூட அப்படியா?

க.வே.பாலகுமாரன் வரிகளை இங்கு மீட்டுப் பார்ப்போம். "உலகத்தின் அடுத்த சூடான மோதல்களமாக தமிழீழத் தேசப்பரப்பு அமையப் போகிறது, என்ற உண்மை உலகத்துக்கு விளங்கி விட்டது. அரசியல் களமானாலும் சரி, இராணுவக் களமாக இருந்தாலும் சரி, மிகப்பெரிய செய்தித் தகவல்களை தன்னகத்தே கொண்ட ஒரு செய்தி களஞ்சியம் உள்ள இடமாக எங்கள் நிலப்பரப்பு மாறியிருப்பதை உலகம் உணர்ந்து வருகிறது. எமது அரசியல் தளம் விரிந்து ஜெனீவா செல்லும்போது இறுதிக்களம் நெருங்கி வருவதை உலகம் உணர்ந்திருக்கிறது". அர்த்தமுள்ள இச்சொற்பதங்கள் ஆழமான எம் சிந்தனைக்கு உதவும்.

பெற்றுக்கொண்டவை பறிக்கப்பட்டதுண்டு, பலஸ்தீனத்தின் பரிதவிப்பு இன்று ஹமாசின் வெற்றியால் பரபரப்பாகி விட்டாலும் இவர்களுக்கு விடிவு வந்துவிட்டதாக- வாழ்த்த முடிகிறதா? அது யதார்த்தமான சமகால அனுபவம். எடுத்துக் கொள்ளப்பட்டவைதான் நிலைக்கும். ஏனெனில் அவை வீரத்தால் விலை கொடுத்து மீட்கப்பட்டவை. கியூபா இன்றும் அதை ஞாபகப்படுத்துகிறது. "விடுதலைப்புலிகள் இயக்கம் யுத்த நிறுத்த மீறல்களைச் செய்யாவிட்டால் அரசாங்கமும் செய்யாது" என்று அரசதரப்பு அறிக்கை கூறுகிறது. இது எதைக் காட்டுகிறது? யுத்த நிறுத்த உடன்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை மேற்கொள்ள அரசு நேரடியாக ஒத்துக் கொள்ளவுமில்லை. அவற்றைச் செய்து முடிக்கக் காலவரையறைகளைக் கூறவுமில்லை. அப்படியானால் பேச்சின் பெறுபேறுகள் என்ன? ஓடி உழைத்தவன் உழைப்பினை உட்கார்ந்து உறுஞ்சும் மேல்வர்க்கம் தான் பெரும்பான்மை இனமா? தமிழர் தம்மைத்தாமே கேட்டுக் கொள்ள வேண்டும்.

மகிந்தவின் சிந்தனை ஒரு சாதனை? உரிக்க உரிக்க ஒன்றுமில்லாத ஒன்றை ஞாபகப்படுத்துகிறது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் யாரோ சொல்லி வாங்கிக் கட்டியதை மீட்டுப்பார்க்கிறது இந்தச் சிந்தனை. இன்றைய அசியல் சூழ்நிலையில் எடுபடாத இடர்வாதம் என்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள். அதையே தங்கள் சிந்தனை என்கின்றனர் ஜே.வி.பியினர். வேண்டாமென்ற நோர்வேயிடம் மீண்டு மண்டியிட்டார்கள். ஒற்றையாட்சியே குறிக்கோள் என்றதில் குறிதப்பிப் போனார்கள். புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசியல் சட்டத்துக்கு ஆகாதது என்பதில் அடிச்சறுக்கினார்கள். அப்புறம் ஒப்பந்தத்தைப் புதிதாக திருத்துதல் பற்றித்தான் பேச்சு என்றதில் பின்னடைவானார்கள் இப்போ "மாறுதல் செய்திருக்கிறோம்" என்று மார்தட்டுகிறார்கள். உலக அரங்கில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்றை ஓட்டாண்டிகளால் ஒரு இரவில் மாற்றிவிட முடியுமா? என்ன? அடிப்படை அறிவுகூட அற்றுப் போய்விட்டது இந்தச் சிந்தனையாளர்களுக்கு.

பேச்சு என்பது நாட்களைக் கடத்தும் நயவஞ்சகத்தின் செயற்பாடுதான். இது புலிகளுக்கும் புரியும். வல்லரசுகளென்றும், வழிகாட்டிகளென்றும், ஜனநாயகப் பாதுகாவலர் என்றும் பறைசாற்றிக் கொள்ளும் அர்த்தமற்ற 'அழுத்தம்' செய்பவர்கள், அப்பாவி இனமொன்றை எத்தனை நாட்களுக்கு இடர்ப்படவிடப் போகிறார்கள்? அதுவரை மகிந்தவுக்கும் அவரது மகுடியாளர்களுக்கும் கொண்டாட்டம் இருக்கும். அது எதுவரை என்பதைத் தான் இனிவரும் சந்திப்புக்கள் தெரிவிக்கவேண்டும். "தீதும் நன்றும் பிறர் தரவாரா" என்கிறார் கணியன் பூங்குன்றனார்.

– ஆசிரியர்


முகவரி :

41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :
020 8480 3320

Email :
tamilarthakaval@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்
Editor :
Aravindan

கணினி, அச்சுப்பதிப்பு :
தமிழர் தகவல்

Computering & Printing :
Thamizhar Thagaval



படைப்புகள் ஆக்கியோரின் உரிமைகளே



4000 பிரதிகள்


தமிழர்களே ! தமிழர்களுடன் தமிழில் பேசுங்கள்

வாசகர்களே ! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள் !

London

# Euro Travels & Tours Ltd

111-B Loampit Vale, Lewisham
London SE13
Tel : 0208 465 9666 Fax : 0208 465 9888

Chennai

# ARS Tours

இணைந்து நடத்தும்

## ஆன்மிகச் சுற்றுலா

10 நாட்கள்
7 நாட்கள்

- அறுபடை வீடு
- சிதம்பரம்
- திருவண்ணாமலை
- மதுரை மீனாட்சி கோயில்

### ஆன்மிக பயணத் திட்டம்

1வது நாள் லண்டனிலிருந்து புறப்படுதல்
2வது நாள் சென்னையில் தங்கி
அவசியமான பொருட்களை வாங்குவது
3வது நாள் சென்னையிலிருந்து
சிதம்பரம் அடைதல். கும்பகோணத்திலுள்ள
அறுபடை வீடுகளில் ஒன்றான
சுவாமிமலை தரிசனம்.

மாலை 4 மணிக்கு தஞ்சாவூர்
பெரியகோவில். பிரதோஷ விரதம் நந்தி
அபிஷேகம் பார்வையிடுதல்.
தஞ்சையிலிருந்து மதுரை -
திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை.
திருச்சி - பழனி
திருச்செந்தூர், திருவண்ணாமலை.





London

**Euro Travels & Tours Ltd ன்**

**111-B Loampit Vale, Lewisham**
**London SE13**
**Tel : 0208 465 9666 Fax : 0208 465 9888**

**சலுகை பிரயாணத் திட்டம்**

**ஒவ்வொரு மாதத்தின் மூன்றாவது வியாழக்கிழமையும்**
**சீரடி சாய்பாபாவை தரிசிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.**

ஒவ்வொரு செவ்வாயும் பிரிட்டிஷ் ஏர்வேஸில் சென்னை அடைதல்.
புதன் கிழமை *Pune* அடைதல்
*A/c Car* மூலமாக *Shirdi* அடைதல் (4 மணி நேர பயணம்)
வியாழக்கிழமை சாய்பாபாவை தரிசிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது
வெள்ளிக்கிழமை சென்னை - சனிக்கிழமை இலண்டன்

அதிர்ஷ்டம் உள்ளவர்களுக்கும்,
பாவங்கள் நீங்கப்
பெற்றவர்களுக்கும் சாயியை
வழிபடும் பேறு கிட்டுகிறது
- ஷீர்டி சாயிபாபா

**டிக்கெட், தங்குமிடம் வசதி, சாப்பாடு உட்பட £ 750 மட்டும்**



## நம்பிக்கையுடன் செல்கிறீர்களா ? [ கேள்வி ]

"யுத்தச் சூழல் இப்பொழுதும் இறுக்கமாகத்தான் இருக்கிறது. ஆட்கடத்தல்கள், இராணுவச் சுற்றிவளைப்புகள், மக்களை அச்சுறுத்த வெளியேற்றுதல் என்று தொடர்ச்சியாக இராணுவ வன்முறைகள் நடந்து கொண்டுதான் இருக்கிறன. தமிழர் தரப்பில் இருந்து மட்டும்தான் எங்கள் தலைவர் வாக்குறுதி அளித்து வருகிறார். தமிழர் தரப்பில் இருக்கிற எதிர்ப்பு நடவடிக்கைகளை கட்டுபாட்டுக்குள் கொண்டுவந்து அந்த நல்லெண்ண சமிஞ்சைகளை தலைவர் காட்டிக் கொண்டிருக்கிறாரே தவிர அரசோ, படைத்தரப்போ எந்தவித நல்லெண்ண சமிஞ்சைகளையும் காட்டவில்லை.சர்வதேச அனுசரணையுடனும் நீண்டகால முயற்சிகளினூடாகவும் கொண்டுவரப்பட்ட உடன்பாடு இது. இந்த உடன்பாட்டை நன்கு வாசித்து விளங்கி அதை நடைமுறைப்படுத்தினாலே கருணா குழு என்ன எல்லாக் குழுக்களுக்கும் முடிவுகட்ட முடியும். பேச்சு முடியும் போதுதான் அதுபற்றி முடிவு செய்வோம்."

(சு.ப.தமிழ்ச்செல்வன் பேட்டி சுடர்ஒளி, இலங்கை)

## அடுத்த இடத்துக்கு ஆசை

"சந்திரிக்காவைத் தவிர இந்த நாட்டுக்குத் தலைமை தாங்கும் தகுதி வேறு எவருக்கும் கிடையாது என நம்பி அதுவரை ஆதரவு நல்கிவந்த அரச ஊடகங்கள், மகிந்த சந்திரிக்காவால் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரே அவரை ஆதரிக்க முன்வந்தன. ஆனால் மகிந்தவுக்கு தொடர்ச்சியாக ஆதரவு கொடுத்து வந்த தனியார் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது விமர்சனம் மேற்கொண்டு வசைபாடும் முயற்சியில் முன்னர் பிரேமதாஸ காலத்தில் ஓசி அபயகுணசேகர செயற்பட்ட விதத்தில் செயற்பட்ட ஜே.வி.பியின் விமல் வீரவன்ச அக்கறை காட்டி வருகிறார் எனத் தோன்றுகிறது.

அன்று அரச விரோதப் போக்குடன் இயங்கி வந்த 'ராவய' பத்திரிகை மீது சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்து இருந்தனர். அதே வகையில் இன்று விமல் வீரவன்ச, 'சண்டே லீடர்', 'இருதின' ஆகிய பத்திரிகைகள் மீது தனது விமர்சனத்தை ஆரம்பித்துள்ளார். முன்னைய காலம் போன்றே இப்போதும் குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவினர் இந்தப் பத்திரிகை நிறுவனங்கள் மீது வேதனைகளை ஆரம்பித்துள்ளன. விமல் வீரவன்சவின் தாடியும் தலைமுடி வளர்ப்பும் ஓசி அபயகுணசேகரவின் பணிக்குப் பெருமளவில் ஒத்துவரும். அவரைப் போல இவரும் ஜனாதிபதிக்கு அடுத்த இடத்தை அடையக் கனவு காணுகின்றார். ராசபக்ச ஜனாதிபதி ஆவதற்க்கு அவருக்குத் தாமே உதவினார் என்று எல்லாம் மகிந்தவின் அடுத்த ஸ்தானத்தை அடைய விமல் வீரவன்ச கனவு கண்டு வருகிறார்"

(சிங்கள மூலம்: உபுல் யோசப் பெர்னாண்டோ, லங்காதீப்)

## அர்த்தம் பிழைக்கிறது

"ஜெனீவாவில் சர்வதேச சமூகத்தின் முன்னால் அனுசரணையாளர்களின் முன்னால் ஏற்றுக் கொண்ட நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் ஜெனீவாவிலே பத்திரிகையாளர்கள் முன்னால் நோர்வே அனுசரணையாளர்கள் இருதரப்பினர்களின் முன்னாலே வெளியிட்டார்கள். ஆனால் குறுகிய காலத்தினுள் பேச்சுவார்த்தை அணியினர் நிலைப்பாட்டை மாற்றி, உண்மையாக ஜெனீவாவில் பேசிய விடயங்கள், இணக்கப்பாடு கண்ட விடயங்களை தலைகீழாக மாற்றி ஒரு பிழையான அர்த்தத்தை கொழும்பிலே வைத்து கொடுத்திருப்பது எமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. நோர்வே அனுசரணையாளர்கள் முன்னால் அணுகப்பட்ட விடயங்களை இருதரப்பில் எவருமே மாற்றியமைக்க முடியாது. நோர்வே தரப்புக்கு நாம் இது பற்றி நிச்சயமாகத் தெரிவிப்போம்."

(சு.ப.தமிழ்ச்செல்வன் பேட்டி)

## அடாவடித்தனத்தில் அமெரிக்கா

விடுதலைப் புலிகளின் நேர்மைக்கும் நிலைத்த கோட்பாட்டிற்கும் ஈடுகொடுக்க முடியாத நிலையில் இலங்கை அரசின் சிந்தனையும் செயற்பாடும் இருப்பதனால் தான் அமெரிக்க அரசு முண்டுகொடுக்க முனைவது போல் தெரிகிறது. தமிழர் எக்கேடு கேட்டாலும் பரவாயில்லை. ஆனால் சிங்கள அரசைக் கட்டிக்காத்து அரவணைப்தில் தான் அமெரிக்க அரசுக்கு அக்கறை உள்ளது. உலக நாடுகளின் உள்நாட்டு அரசியலில் நேர்மையற்று மூக்கை நுழைத்து மொக்கேனப்பட்ட வரலாறு அமெரிக்க அரசுக்கு நிறைய உண்டு. வியட்நாமில் வீழ்ச்சியைக் கண்ட பின்னும், பாடம் படிக்க அது மறுக்கிறது.

ஈரான், ஈராக் போன்ற நாடுகளில் கூட தேவையின்றித் தலையிட்டு இரத்தக்களரியை அமெரிக்கா ஏற்படுத்தியுள்ளது. பலஸ்தீன மக்கள் திரண்ட ஆதரவோடு ஹமாஸ் இயக்கம் ஆட்சியமைத்ததைக் கண்டு அமெரிக்க அரசு புழுங்குகிறது. மக்களின் தீர்ப்பை மதிக்க மறுக்கிறது. உலகின் முதலாவது பயங்கரவாதியாக விளங்கும் அமெரிக்க அரசு, தான் ஒரு வல்லரசு என தனிக்காரணங் கொண்டு அகிலத்துக்கு அறிவுரை வழங்க முனைவதை நாம் ஏற்க முடியாது. 1986ல் அமெரிக்க அரச திணைக்கள உயரதிகாரி ஒருவருடன் நான் உரையாடியபோது, "இலங்கைத் தீவில் உள்ள தமிழர்களாகிய நீங்கள் நாட்டைத் துண்டாட முனைகிறீர்கள் உங்களை நசுக்கி நொறுக்குவோம்" என உரைத்தார்.

(மா.க. ஈழவேந்தன் பா.உ. - தினக்குரல்)

## மூளையற்ற சிந்தனை

"மகிந்த சிந்தனைகள் என்பது ஒரு அசிங்கமான சிந்தனை. போர் நிறுத்த ஒப்பந்தம் முற்றிலுமாக மாற்றி அமைக்கப்பட்டு புதிதாகச் செயற்பட வேண்டுமென்பதுதான் மகிந்த சிந்தனையின் அடிப்படை. ஆனால் அப்படி உண்மையிலேயே நடக்கவில்லை. மகிந்தவின் சிந்தனை இன்று அவருக்கே நிபந்தனையாக மாறியிருக்கிறது. ஜே.வி.பி கூட இன்று புலிகளைப் பலவீனப்படுத்த வேண்டும் என்று சொன்னாலும் உலகத்தின் முன்னால் தங்கள் தரப்பை வெளிப்படுத்த வேண்டிய நிலைக்கு சிங்களம் இன்றுமுதல் முறையாகத் தள்ளப்பட்டிருக்கிறது. நாங்கள் திரும்பிப் பார்க்கிறோம். எங்கள் துயரத்தின் குரல் - அழுத கண்ணீர் - சிந்திய குருதி உலகத்தின் கண்களுக்குத் தெரியாமல் முற்றிலுமாக மூடி மறைக்கப்பட்டு மூலைகளிலே அநாதைகளாக முற்றுகையிடப்பட்டிருந்தோம். ஆனால் இன்று எங்களது எதிரியே எங்களுக்கான அனைத்து வாய்ப்புக்களையும் உருவாக்கித் தருகிற காலகட்டம் ஏற்பட்டிருக்கிறது. எங்களது இறுதி வெற்றியைக் கூட எங்களது எதிரிதான் உறுதிப்படுத்துவான்."

(மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன்)

## பலமான பாதுகாப்பா ?

தற்போது குடாநாட்டின் அரசபடைகள் தமது நிலைகளை உச்சக்கட்டமான பாதுகாப்பாக உறுதிப்பாட்டுடன் இருப்பதையே விரும்புகின்றன என்பது அவர்களின் அண்மைகால நகர்வுகளும், நடவடிக்கைகளும் எடுத்துக் காட்டுகின்றன. ஏனென்றால் அரச படைகளின் உயர்பாதுகாப்பு வலய மீள் குடியமர்வு, படைச்செறிவு, குறைப்பு போன்றவை தொடர்பான பேச்சுக்கள் நடத்தப்படுகின்ற சூழலில் கூட படைத்தரப்பு படைத்தளங்களை விஸ்தரிப்பதில் கூடிய அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. போர்நிறுத்த உடன்பாடு முறிவடைந்தால் புலிகள் குடாநாட்டின் மீது நடத்தக்கூடிய தாக்குதலைத் தடுத்தல் அவர்களின் ஊடுருவலை முறியடித்தல் எனப் படைத் தரப்பின் முறியடிப்பு வியூகங்கள் வகுக்கப்பட்டிருகின்றன. ஏனெனில் குடாநாட்டை இழத்தல் என்பது சரத் பொன்சேகாவை முற்றுமுழுதாகவே அவமானப்படுத்தும் ஒரு விடயமாக கணிக்கப் பெறும். சரத் பொன்சேகாவின் தற்பாதுகாப்புத் திட்டம் என்பது படையினரின் முழுமையான ஆதரவு முன்னணி, துருப்புக்களின் மனோபாவத்தில் தான் தங்கியிருக்கிறது. இதற்காக விசேட பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கிறது. சரத் பொன்சேகா இராணுவத் தளபதியானதின் பின் ஐந்து தடவைகள் யாழ்ப்பாணம் சென்றிருக்கிறார், அதுவும் மூன்று மாதங்களுக்குள் என்பது குறிப்பிடத்தக்கது.

(நன்றி: சுபத்ரா, வீரகேசரி)

*New Mot Station Open !*

# CAPITAL AUTOS LTD.

இவர்களின் விளம்பரத்தை

ttn IBC

வானொலி

தொலைக்காட்சியில் கேளுங்கள்

- Fully equipped M.O.T. & accident repair centre
- Insurance repairs welcome
- Recovery Service
- Approved insurance repairs
- Courtesy vehicle available For most repairs
- Professional friendly service and advice
- Collection & deliver within the local area

Accident Repair Centre & General Services & Repairs to all Makes and Models

BMW MERCEDES
VAUXHALL
HONDA
VOLKSWAGEN
NISSAN Ford

இலண்டனில்
எந்த இடத்தில் இருந்தாலும்
உங்கள் வாகனத்
திருத்த வேலைகளுக்கு
நீங்கள் செல்ல வேண்டிய இடம்

*Hurry - Limited Offer !*

**£ 10 OFF Your M.O.T!**

BASED ON CURRENT M.O.T FEE OF £42.10
• OUR VOUCHER PER CAR ONLY

Reg : ______
Model : ______
Name : ______
Tel : ______

51A Milton Avenue East Ham London E6 18G
Tel : 020 8470 4789 Fax : 020 8472 2147 www.capitalauto.com

ரூட்டிங்கில் முதல் தமிழ்க்கடை

## *Prime Food & Wine*

News Papers & Magazines, Off Licence - Grocery
Asian & Sri Lankan Groceries - Fruits & Vegetables

மணங்கவரும் மளிகைச்சாமான்கள், மென்பானங்கள்,
மதுபான வகைகள், பழங்கள்,
மரக்கறி வகைகள், மீன், இறைச்சி
என எல்லாவற்றிற்கும்
குறைந்த விலையில்
நிறைந்தசேவையைப்
பெற எம்மை நாடுங்கள்

**118, Tooting High Street**
**London SW 17 0RR**
**Tel : 020 8682 3777**



வோல்த்தம்ஸ்ரோவில்



## *Kumarans*

குமரன்ஸ்

TEXTILES

136, Hoe Street Walthamstow
London E17 4QR
Tel : 020 8521 3444
020 8530 3033
Fax : 020 8521 9444

## கொடை ?

பணத்திலே சிறிதும் ஆசையொன்றில்லை நான்
படைத்த அப்பணங்களைப் பலகால்
கிணற்றிலே எறிந்தேன் குளத்திலும் எறிந்தேன்
கேணியில் எறிந்தேன் எந்தாய்
குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளை
எறிகிலே கொடுக்கின்றேன் பிறர்க்கே
கணத்திலே எல்லாம் காட்டுநின் னருளைக்
கண்டனன் இனிச்சொல்வதென்னே!

- வள்ளலார் பெருமான்

## புத்துயிர் !

போராளிகள்
செத்துக் கொண்டிருக்கும்
மண்
என்றார்கள்
என்
மண்ணை
திருத்தினேன்
போராளிகள்
பிறந்து கொண்டிருக்கும்
மண்!

- கவிஞர் காசி ஆனந்தன்

## போனது !

நீ யாரென்பது
தெரியாமல் தொடங்கிய
கதையில்
நான்
யாரென்பது
தெரியாமல் போய்விட்டது!

- சரவணமுத்து

## ஏக்கம் !

என் தேசத்தின்
தென்றல் காற்றுக்குச்
சிறகொடிந்து போனது
முண்டியடிக்க
முடியாத காற்று
இப்போது
நொண்டியடிக்கிறது!

- கவிஞர் மு. மேத்தா

## இறை வடிவம் ?

உண்மையின் வடிவம் இறைவன்
இறைவனின் வடிவம் மனிதன்
ஆனால்
இறை வடிவான மனிதனிடம்
உண்மை இல்லை!

- நாகமுல்லை

## வெண்மை !

சமாதானக் கொடியேற்றம்
பூக்களாய் உதிர்ந்தன
புறாச் சிறகுகள்!

- பாவலர் அறிவுமதி

## முடியாது !

பத்திரப்படுத்த
முடியாதென்றாலும்
செடியிலேயே
விட்டுவரவும்
முடியவில்லை
பூக்களை!

- பழநிபாரதி

## வேரும் பேரும் !

இலங்கையிலே - இருந்தமிழும்
இரங்கையிலே.....
விட்டுப் போகுமா பந்தம்?
விலகிப் போகுமா சொந்தம்?
பட்டுப் போகுமா
பின்னெடும் பொழுதாய்ப்
பசியப் பசியப்
படர்ந்துவரும் சொந்தம்!
தூத்துக் குடிக்கும் -
தலைமன்னாருக்கும் -
இடையில்
இழையோடுவது -
நீர் அல்ல
வோ ̇; அந்த
வேருக்கு அன்பென்று
பேர் !

- கவிஞர் வாலி



மாதமிரு திருக்குறள் கற்போம்

## காலமறிதல்

" ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்" (குறள்: 484)

செய்தற்குரிய காலத்தை ஆராய்ந்து அறிந்து, அதனைத் தகுந்த இடத்தொடும் பொருந்தச் செய்ய வல்லனாயின், அவன் உலகம் முழுவதையும் தானே ஆளக் கருதினாலும் அது அவனுக்கு கைகூடும்.

" காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்" (குறள்: 485)

உலகையே வெல்லக் கருதுபவர், மனம் அசையாது தக்க காலம் வருமளவும் அதனையே எதிர்பார்த்துப் பொறுமையாகக் காத்திருப்பர்.

# ஊர் சுற்றுதல் அறிவு

'' ஏம்பா, இப்பிடி வெட்டித்தனமா ஊர் சுத்திகிட்டு இருக்கே? '' என்று பெற்றோர்கள் சிலரும், '' என்ன வேல இது, ஊர் சுத்துறதே பொழப்பா போச்சு '' என்று இளைஞர்கள் சிலரும் அலுத்துக் கொள்வதை நாம் பார்த்திருக்கிறோம்.

ஆனால், சித்தர்களும், ஞானிகளும் ஊர் சுற்றிகளாகத் தான் இருந்தார்கள். பல்வேறு சமய நெறிகளைத் தொகுத்து எழுதியுள்ள ராகுல் சாங்கிருத்தியாயன் ' ஊர் சுற்றிப் புராணம் ' என்றே ஒரு நூலை எழுதியுள்ளார். இலக்கிய வடிவங்களில், ' பயண இலக்கியம் ' தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளது. யுவான் சுவாங் போன்ற பயணிகளின் குறிப்புகள், இருளடைந்து கிடந்த இந்தியாவின் வரலாற்றுப் பக்கங்கள் சிலவற்றில் புதிய ஒளியைப் பாய்ச்சி உள்ளன.

எனவே, ஊர் சுற்றுதலைப் பற்றி நாம் குறைவாக எண்ணிவிடக் கூடாது.

**ஊர் சுற்றுதல் ஒரு தேடல்**

**ஊர் சுற்றுதல் ஓர் அனுபவம்**

**ஊர் சுற்றுதல் ஓர் அறிவு**

ஊர் சுற்றும் பழக்கமும், தேவையும் இல்லாமல் போயிருக்குமானால், மனித இனங்கள், திட்டுகளாகத் தேங்கி இருக்கும். மொழி, பண்பாடு, உற்பத்தியாகும் பொருள்கள் முதலான எவையும் பரிமாற்றம் செய்யப்படாமல் போயிருக்கும்.

நிலத்தின் தன்மை, பருவ நிலை, மக்களின் பழக்க வழக்கங்கள் எல்லாம் நாட்டுக்கு நாடு மாறிக் கிடக்கின்றன. சகாரா பாலைவனத்தில் களைத்தவன், சிரபுஞ்சிக் காட்டில் நனைந்து மகிழலாம். கோடை வெயிலில் காய்ந்து கிடந்தவன், இன்னொரு நாட்டில் கொட்டும் பனியைக் கண்டு ரசிக்கலாம்.

உணவுகள், உடைகள், உறவு முறைகள் அனைத்திலும் பல்வேறு மாற்றங்கள் உள்ளன. நாட்டுக்கு நாடு என்றில்லை, ஒரே நாட்டிலேயே, மாநிலத்துக்கு மாநிலம், மாவட்டத்திற்கு மாவட்டம், ஊருக்கு ஊர் பல்வேறு மாறுதல்கள் உள்ளன.

நேரத்தையும், பணத்தையும் செலவிட்டு, பல்வேறு ஊர்களையும், நாடுகளையும் சுற்றிப் பார்க்கின்றவர்கள் அறிவாளிகள் ஆகின்றனர். சுற்றுலாவிற்காக நாம் செலவிடும் நேரமும், பணமும் வீணானவை என்று நாம் கருதக் கூடாது. அவை செலவுகள் அல்ல. முதலீடுகள்.

சுற்றுலாவிற்காக நேரம் ஒதுக்கவும், பணம் சேமிக்கவும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். ஆண்டிற்கு ஒரு முறையேனும், குடும்பத்தினருடன், நண்பர்களுடன் சுற்றுலா சென்று வருவதை வாழ்வின் கட்டாயமாக்கிக் கொள்ள வேண்டும்.

இடங்களைச் சுற்றிப் பார்ப்பதும், புதியவைகளை அறிந்து கொள்வதும் மட்டும் சுற்றுலாவின் நோக்கங்கள் அல்ல. சுற்றுலா நாள்களில், வழக்கமான பணிகளிலிருந்தும் இயந்திரத்தனமான வாழ்க்கை முறைகளிலிருந்தும் நாம் தற்காலிகமாக விடுபடுகிறோம். மனம் லேசாகின்றது. உடன் வருபவர்களோடு உரையாடவும், அவர்களைப் பற்றிக் கூடுதலாக அறிந்து கொள்ளவும் நமக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கின்றது. சில வேளைகளில், நம்மைப் பற்றியே நாம் எண்ணிப் பார்க்கவும் ஒரு தனிமை கிடைக்கின்றது.

மாத ஊதியம் பெறுகின்றவர்கள், மளிகைக் கடைக்கு, வீட்டு வாடகைக்கு, மின் கட்டணத்துக்கு என்று தொகையை ஒதுக்கும் வேளையில், சுற்றுலாவிற்கு என்றும் ஒரு சிறு தொகையையேனும் ஒதுக்குங்கள்.

சுற்றுலா என்பது ஆடம்பரமற்றது.

இயந்திரத்தனமான வாழ்க்கை என்பது சிறை. சுற்றுலா என்பது சிறகு.

வீடே உலகம் என்று நாம் வாழ்வதா? உலகையே வீடாக்கி உறவு வளர்ப்போம்.

– இனியன்

# STARR ESTATES LIMITED

**ESTATE AGENS - VALUERS - SURVEYORS PROPERTY CONSULTANTS**

- Sales
- Lettings
- Property Management
- Surveyors
- Valuations
- Mortgages
- Re-Mortgages
- Commercial Loans
- Buildings & Contents Insurance
- Life Insurance

Advice and assistance on purchase of investment abroad including Europe, Middle East ( Dubai ) and Far East

**Please call us with your requirements**
**ADVICE ON FINANCIAL SERVICES**
**PROVIDED BY QUALIFIED ADVISORS**

**CENTRAL PARADE**
Station Road Harrow Middlesex HA1 2TW
Tel : 020 8427 5328
Mob : 07956 543 044 Fax : 020 8863 5705
Email : info@starrestatesltd.co.uk
Web : www.starrestatesltd.co.uk

# லதா தமிழ் களஞ்சியம்

SRI LANKAN, ENGLISH & CARRIBEAN FOODS
AUDIO, VIDEO, TEXTILES & TRAVEL TICKETS

**எம்மிடம் தினமும் இலங்கை, இந்திய பசுமையான மரக்கறி வகைகள்,**
**பழ வகைகள், அனைத்து ரக அரிசி வகைகள், கடலுணவுப் பொருட்கள்**
**சனி – ஞாயிறுகளில் உடன் பங்கு ஆட்டிறைச்சி**



சமையலுக்கும் தேவையான பல வகைப் பாத்திரங்கள், சுவாமிப்படங்கள், கோவிலுக்குத்
தேவையானப் பொருட்கள் முன்னணி எழுத்தாளர்களின் நாவல்கள், சிறுவர்களுக்கான
ஆரம்பப் புத்தகங்கள், தமிழ் – சிங்கள சஞ்சிகைகள்.
தொலைபேசி அட்டைகள், தமிழ். ஹிந்தி, சிங்கள,
ஆங்கிலத் திரைப்படங்கள்
**DVD, VCDs, AUDIO, CD**களை வாடகைக்கும்
விலைக்கும் பெற்றுக்கொள்ளலாம்



***30 LOAMPIT HILL, LEWISHAM, LONDON SE13 7SW***
***TEL : 020 8265 0629***
**LATHA SUPER COMPLEX**

# வாழ்க்கையில் உயர வேண்டுமா

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

ஒருத்தர் ஒரு தவறு செய்துவிடுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதை அவருக்குச் சுட்டிக்காட்ட வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம் என்றும் வைத்துக் கொள்ளுங்கள். என்ன செய்யலாம்?

அதற்கு இரண்டு வழிகள் உண்டு.

ஒன்று... அவரிடம், " நீ செய்தது தவறு ! " என்று சொல்வது.

இன்னொன்று... ' எது சரி ? ' என்று அவர் புரிந்துகொள்ள உதவி செய்வது.

இந்த இரண்டாவது வழி இருக்கிறது பாருங்கள். இது நிர்வாக இயலில் ரொம்ப முக்கியம்.

அலுவலகத்திலே வேலை பார்க்கிறவர்கள் முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன தெரியுமா?

உடன் பணியாற்றுகிற ஊழியர்களிடம் எப்படிப் பழக வேண்டும்?

உத்தரவு போடுகிற மேலதிகாரிகளிடம் எப்படி பழக வேண்டும்?

தனக்குக் கீழே பணிபுரிகிறவர்களிடம் எப்படி பழக வேண்டும்?

வாடிக்கையாளரிடம் எப்படிப் பழக வேண்டும்?

இவை எல்லாமும்தான்.

சரி...

இவர்கள் எல்லோரிடமும் செம்மையான உறவை ஏற்படுத்திக் கொள்ள நான் தயார். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்களா?

நிர்வாக இயலில் அதற்கென ஒரு தனி பாடமே நடத்துகிறார்கள். அந்தப் பாடம்தான் திறமையான உறவு என்பது.

Inter personal skills என்று அதைச் சொல்லுகிறார்கள்.

எந்த வேலையில் இருந்தாலும் சரி...இந்த ' உறவுகளை வளர்க்கும் திறன் ' உள்ளவர்கள் சீக்கிரம் முன்னுக்கு வந்து விடுகிறார்கள்.

எனவே –

மற்றவர்களிடம் உறவைப் பலப்படுத்திக் கொள்வது எப்படி என்பதை தெரிந்துக்கொள்ளுங்கள். அவ்வளவுதான். அதன்பிறகு நீங்கள் எந்த தடையையும் சுலபமாகத் தாண்டி விடுவீர்கள். செய்கிற தொழிலில் முன்னுக்கு வந்துவிடுவீர்கள்.

இதை நான் சொல்ல வில்லை. ஹார்வார்ட் பல்கலைக் கழகம் சொல்கிறது.

அங்கே இது பற்றி ஓர் ஆய்வு நடந்தது. அதற்காக ஒரு கணக்கெடுப்பு நடத்தினார்கள்.

' பார்க்கிற வேலையில் எது மாதிரி குணம் படைத்தவர்கள் வெகு வேகமாக முன்னுக்கு வருகிறார்கள்...? ' என்பதைத் தெரிந்து கொள்வதற்காக நடந்தது அந்தக் கணக்கெடுப்பு.

வெவ்வேறு துறைகளில் வேகமாக முன்னுக்கு வந்திருக்கிற பல பேரைச் சந்திந்து இந்த ' சர்வே ' ஒன்றை நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிற உண்மை என்ன தெரியுமா?

ஒருத்தர் ஒரு வேலையில் இருந்தால் அந்த வேலை சம்பந்தப்பட்ட அறிவு அவருக்கு 35 சதவீதம் இருந்தால் போதும்... ஆனால் உறவுகளை வளர்க்கும் திறன் 65 சதவீதம் வேண்டும். அப்படி உள்ளவர்கள் சீக்கிரம் முன்னுக்கு வந்துவிடுகிறார்கள்.

ஆகவே...

ஒருத்தருக்கு வேலை சரியாகப் புரியவில்லை என்றால் கூடப் பரவாயில்லை... விவரமாக மற்றவர்களிடம் பழகுவது எப்படி என்பது தெரிந்தால் போதும்! அவர் முன்னுக்கு வந்துவிடலாம்.

அலுவலகங்களிலே மட்டும் அல்ல... எல்லா இடங்களுக்கும் இது பொருந்தும்.

இல்லங்களிலே கூட இந்தப் ' பழகும் தன்மை ' மிகவும் முக்கியம். அடுத்தவர்களிடம் பழகுவது எப்படி என்பதை அறிந்து கொள்ளாதவர்கள் வாழ்க்கையில் முன்னேற முடியாது.

இன்றைக்கு உலகத்தில் ஆயுதங்களால் காயப்படுத்திக் கொள்கிறவர்களைவிட வார்த்தைகளால் காயப்படுத்திக் கொள்கிறவர்கள்தாம் அதிகம். ஆகவே அளந்து பேசத் தெரிந்தவர்கள் அடுத்தவர்களிடம் உரச வேண்டிய அவசியம் இருக்காது.

சான்றோர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

நீங்கள் இந்தப் பூமியில் பிறந்ததன் அர்த்தம் பூர்த்தியாக வேண்டும் என்றால்... அடுத்தவருக்கு உதவி செய்யுங்கள்.

அடுத்தவருக்கு உதவி செய்ய முடியாவிட்டால் கூடப் பரவாயில்லை. ஆனால் யாரையும் புண்படுத்திவிடாதீர்கள்.

இதுதான் பெரியவர்கள் நமக்குச் சொல்கிற அறிவுரை.

எனக்குத் தெரிந்த ஒரு நண்பர் இருக்கிறார். அவர் அலுவலகத்திலே வேலை பார்க்கிறார். அவர் சொல்லுவார் :

" எனக்கு இந்த Inter personal skills ரொம்ப அதிகம் சார்... சக ஊழியர்கள் கிட்டே மிகவும் சுமுகமாக நடந்துக்குவேன் ! " என்பார்.

அது மட்டுமல்ல. இன்னும் சொல்வார்:

" என்கூட வேலை பார்க்கிற ஒருத்தருக்கு ஏதாவது ஒரு கஷ்டம்னா... அந்த சமயத்திலே அவர் செய்ய வேண்டிய வேலையை நான் செஞ்சிடுவேன் சார். "

நான் அவரிடம் கேட்டேன்.

" சமீபத்திலே அப்படி ஏதாவது செஞ்சிருக்கீங்களா? "

" ஓ... செஞ்சிருக்கேன் ! "

" என்ன ? "

" போன வாரம் புதன் கிழமை எங்க ஆபிஸ்லே என் பக்கத்து வீட்டுக்காரருக்கு வயத்து வலி... உடனே நான் ' மெடிக்கல் லீவ் ' போட்டுட்டு எங்க வீட்டுக்குப் போயிட்டேன். "

# குறுகத் தரித்த குறள்

' ஆசை வெட்கம் அறியாது ' என்பார்கள். ஆழ்ந்த வாழ்வியல் அனுபவத்தை உள்ளடக்கிய தொடர் இது.

' இதுபோன்ற ஆசைகள் வரக்கூடாது ', ' இதன் மீது அல்லது இவர் மீது ஆசைப்படக்கூடாது ' என்பன போன்ற சமூக, அறிவியல் விதிகளையெல்லாம், மனம் மீறவே விரும்பும். இந்த ஆசைக்கு ஆட்பட்டு இந்தச் செயலைச் செய்தால், நாளைக்குப் பழி வருமே என்ற வெட்க உணர்வு, ஆசைக்குக் கிடையாது. அது எதன் மீதும், எவர் மீதும் ஆசைப்படும். அதன் இயல்பு இதுதான்.

அதனைக் கட்டுக்குள் வைத்துக்கொள்ளும் மனிதர்களையே சமூகம் மதித்துப் போற்றுகிறது. கட்டுப்பாடு என்பது இயற்கைக்கு எதிரான ஒன்றுதான். அதற்காக இயற்கையின் போக்கிலேயே நாம் வாழ முடியாது. உடை உடுத்தவது, முடி திருத்துவது, சமைத்து உண்பது என எல்லாமே இயற்கையை மறுப்பதுதான். அதற்காக அவற்றை நாம் கைவிட முடியாது.

சாதாரண மனிதர்களைக் காட்டிலும், பெரிய வர்களுக்கு, தலைவர்களுக்கு, மன்னர்களுக்குக் கட்டுப்பாடு கூடுதல் தேவையாக உள்ளது. கூடாத ஆசைகளைத்தான் சாதாரண மனிதர்கள் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. தலைவர்களோ, பிறர்க்குத் தீங்கு விளைவிக்காத, அறநெறிகளுக்கு எதிராக அல்லாத சில ஆசைகளைக் கூடக் கட்டுப்படுத்தி கொள்ள வேண்டும் என்பது வள்ளுவர் வாக்கு.

' குற்றங்கடிதல் ' என்னும் அதிகாரத்தின் கீழ்

" காதல் காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல் " (440)

என்னும் குறள் இடம் பெற்றுள்ளது. இக்குறளுக்கு " தான் காதலித்த பொருள்களை, அவர் அக்காதல் அறியாமல் அனுபவிக்க வல்லனாயின், பகைவர் தன்னை வஞ்சித்தற்கெண்ணும் எண்ணம் பழுதாம் " என்று உரை எழுதுகிறார் பரிமேலழகர்.

ஆசையைக் கட்டுப்படுத்துதலே சரி. ஒருவேளை, அது இயலாமற் போகுமிடங்களில், பிறர் அறியாமல் அதனை அனுபவிக்க வேண்டும் என்னும் இக்கூற்று நம்மிடம் சில ஐயங்களை எழுப்புகின்றது.

' பிறர் அறியாமல் குற்றம் செய் ' என்று வள்ளுவர் கூறுவது போலல்லவா இது உள்ளது என்று நமக்குள் ஓர் எண்ணம் உருவாகின்றது. அஃதாவது, தப்பித்தால் தப்பில்லை என்கிறாரா வள்ளுவர் என்று கேட்கத் தோன்றுகிறது.

அறம் பாட வந்த வள்ளுவர், ஒருநாளும் அவ்வாறு கூற மாட்டார் என்றும் நம் உள்மனம் உரைக்கின்றது.

குறளை ஆழ்ந்து படித்தால், நமக்கு உண்மை விளங்கும். ' தவறான ஆசைகளைப் பிறர் அறியாமல் அனுபவி ' என்று வள்ளுவர் எங்கும் கூறவில்லை. காதல் காதல் அறியாமை – அதாவது ' நாம் விரும்பும் பொருள் மீது நமக்குள்ள விருப்பத்தைப் பிறர் அறியாவண்ணம் ' என்றுதான் கூறுகின்றார்.

எடுத்துக்காட்டிற்காக, எளிமையாக ஒன்றைப் பார்க்கலாம். ஒரு மன்னர் அல்லது தலைவருக்கு, ஒரு வகை உணவுப் பொருளின் மீது பெரு விருப்பம் உண்டு என்று கொள்ளலாம். அதனை அவர் சுவைப்பதில் பிழை ஒன்றுமில்லை. ஆனால், அப்பொருளின் மீது உள்ள விருப்பத்தை அவர் வெளிக்காட்டி விடக்கூடாது என்பதுதான் வள்ளுவரின் அறிவுரை.

ஏன் அப்படி?

ஒரு மன்னரின் அல்லது தலைவரின் பெரு விருப்பத்தை மற்றவர்கள் அறிந்து கொண்டால், அதனை அவருக்குக் கொண்டுவந்து கொடுத்து அவரைக் கவரவும், அதன் மூலம் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும் சிலர் முயற்சிப்பர். அதற்கு அரசன் இடம் கொடுக்கக் கூடாது என்பதற்காகவே, ஒரு பொருள் மீது தான் கொண்டுள்ள விருப்பத்தைக் கூட அரசன் வெளிக்காட்டக் கூடாது என்று குறள் கட்டளை இடுகிறது

ஒரு நாட்டின், ஒரு சமூகத்தின், ஒரு கட்சியின் தலைவன் என்பவன் ஏறத்தாழ ஒரு துறவியைப் போல வாழ வேண்டியவன். சில வேளைகளில், அத்துறவு எண்ணம் தளர்வது இயல்பு. அப்போது, விருப்பத்தை வெளிப்படுத்தித் தன் பலவீனத்தைக் காட்டிவிடாமல் இயல்பாக இருக்க வேண்டும் என்பதே இக்குறள் தரும் பொருள்.

– சுப. வீரபாண்டியன்

# வரலாற்றைப் பதிவுசெய்து பேணும் உணர்வு தமிழரிடை வளர்க்கப்படல் வேண்டும்

தமிழர்கள் வரலாற்றைப் பேணாதவர்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக உண்டு. அதற்கான காரணம் பண்டைய இலக்கியங்கள் பலவற்றை ஆற்றிடை அழியவிட்டதும், அதிமுக்கியமான வரலாற்றுத் தடயங்களை பாதுகாக்காததும் தான். இன்றும் கூட மும்மன்னர்கள் வாழ்ந்த கோட்டைகளோ கொத்தளங்களோ காணப்படவில்லை என்ற யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வந்து குடியேறியவர்களின் கதைகளையும், கருத்துக்களையும், அவர்கள் கலாச்சாரத்தையும் கண்களை மூடிக்கொண்டு பின்பற்றும் காட்டுமிராண்டித்தனம். கண்டிக்கப்பட



வேல் அமுதன்

வேண்டியதில்லையா? நம்மை விட வந்தவன் உயர்ந்தவன் என்ற எண்ணம் எழுந்ததால் தான் நமது கலாச்சாரங்கள் களையிழந்து போயின. தமிழர்களிடத்தில் சாதியம் வந்தது, புரோகிதம் வந்தது அதனால் மூடப்பழக்கங்கள் வந்தன. பொய்யான கலாச்சார பிறழ்வுகள் வந்தன. வந்தவற்றை வாழவைத்தோம் சொந்தங்கள் சுரண்டப்பபடுவதைக் கண்டுகொள்ளவே இல்லை. வள்ளுவர் ஆண்டில் சர்ச்சைபடுகிறோம். வள்ளலாரின் சமத்துவத்தில் தெளிவில்லாமல் இருக்கிறோம். ஔவையாரின் காலம் பற்றிய சிந்தனை இல்லை. ஏன் யாழ்ப்பாணப் பொது நூலகம் எப்போது எரிக்கப்பட்டது என்பதுகூட நம்மில் சிலருக்குச் சரியாகத் தெரியவில்லை. கி.பி. 300ல் எழுதப்பட்ட நக்கீரரின் திருமுருகாற்றுப்படை நாயகனான முருகனுக்கு கி.பி.438ல் தளபதி பரஞ்சோதியாரால் (சிறுத்தொண்டர்) வடநாட்டிலுள்ள வாதாபியில் இருந்து கொண்டுவரப்பட்ட விநாயகர் அண்ணனாக்கப்பட்டிருக்கிறார். அது எப்படி என்று நாம் கேட்கவேண்டாமா? முழுத்தமிழ் கடவுளான முருகனுக்கு பூணூல் போட்டு வைத்ததைக் கூட நாம் தட்டிக்கேட்டோமோ? கங்கை கொண்ட சோழபுரத்தைக் கண்டபிறகாவது நமக்கு வரலாறு படிக்கும் எண்ணம் வரக்கூடாதா?

தமிழர்களின் நாகரீகம் சிந்துவெளியில் தொடங்கியது என்கிறார் வில்பிரட் நோயலே. நீலகண்ட சாஸ்திரி, அவிநாசிலிங்கம், சாமிநாத சர்மா என்று எல்லோருமே அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் அந்த நாகரீகத்தின் உண்மையான வெளிப்பாட்டினை நாம் இழந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. காரணம் தமிழைப் பேசுபவர்கள் உலகில் எந்த மூலையிலும் அதிகாரத்தில் அமர்ந்திருக்கவில்லை என்பதுதான். தமிழர் நாகரீகத்தை தமிழகத்துக்கு வெளியே கொண்டுபோன பெருமைக்குரியவன் இராசேந்திர சோழன் மாத்திரமே. அவனது காலத்திலே நடந்த கலைப்பரிமாற்றங்களும், ஆட்சி விரிவாக்கமும்தான் இன்றும், கம்போடியா, தாய்லாந்து, பியூனான், மியான்மார், போணியோ போன்ற இடங்களில் காணக்கூடிய கலாச்சாரச் சின்னங்களை வைத்திருக்கின்றன. இராசேந்திரனுக்குப் பின் அவனது ஆட்சியின் நிலப்பரப்பை- கிழக்கு ஆசியாவரை விரிந்து சென்ற வீரத்தை தமிழர்கள் பேணவில்லை என்பதுதான் பெருங்குறையாகிறது.

திருக்குறள் சொல்லும் தமிழரின் அரசியல், நாகரீகம், குடும்ப உறவு, போர்முறை, பெண்மை, வீரம், காதல், வணிகம் எல்லாமே தமிழர்களிடம் இருந்ததா? என்ற கேள்விக்குறிக்குப் பதில் சிலப்பதிகாரமே தந்தது என்கிறார் வில்பிரட் நோயலே. 'இலக்கியம் ஒரு செய்தி' என்று கூறுகிறார்கள். திருக்குறளின் இலக்கணங்களுக்கு இயல்பு நிலையாக தமிழன் வாழ்வைக்காட்டி ஒரு வரலாற்றை நிருப்பிப்பது சிலப்பதிகாரமே. அந்தச் சிலப்பதிகாரத்தில் திருமணம் பற்றி இரண்டே வரிகளில் அடக்கிவிடுகிறார் அடிகளார்.

"இருபெருங் குரவரும் ஒரு பெருநாளால் மணவணிகாண மகிழ்ந்தனர்" என்கிறார். ஆகவே

அன்றைய திருமணங்கள் புரோகிதத்தின்படி நடக்கவில்லையென்றே நாம் உணருகிறோம். மனமொத்த வாழ்விலோ அல்லது மாறாத குடிப்பண்பு ஊடே தான் அவை தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்று, அன்றைய மனமொத்த திருமணத்தை அல்லது உடன்போதலை 'ஒடிப்போதல்' என்று கொச்சைப்படுத்தப்பட்டுவிட்டது. இந்த தாழ்வு மனபான்மையைத் தமிழகத்துக்குத் தந்தவர்கள் வந்தவர்கள்தான்- வரலாற்றை மாற்றிவிட்டார்கள்.

இனி இன்னொரு கேள்விக்கு வருவோம். தமிழர்களின் சமயம் எது? சைவமா? வைஷ்ணமா? இன்றும் தீர்க்கப்படாத இந்தத் தடுமாற்றங்கள் அன்றே தோன்றிவிட்டவை. கி.பி.52ல் புனித தோமையர் (யேசுபிரானின் சீடர்களில் முக்கியமாக ஒருவர்) தமிழகத்துக்கு வருகிறார். அவர் வருகின்றபோது தமிழகத்தில் ஒரு மதப்போர் நடந்து கொண்டிருக்கிறது. சமணம், பௌத்தம், சைவம் என்பன ஆரியத்துடன் மோதிக் கொண்டிருக்கின்றன. தோமா பார்க்கிறார்; அவர் பார்வையில் கிறிஸ்துவின் அடிப்படை கொள்ளைகளுக்கும் சமணம், பௌத்தம், சைவம் என்பனவற்றிற்கும் நீண்ட இடைவெளியைக் காணமுடியவில்லை. அதனால் அவர் இவர்கள் அணியில் நிற்கவேண்டியதாயிற்று. ஆரிய வைதீகத்தை அவர் எதிர்த்து நின்றபோது தோமையர் கி.பி.72ல் மயிலாப்பூரில் குதறப்படுகிறார். குதறியவர்கள்- அவரைக் கொன்றவர்கள் ஆரிய வைதீகப் பிராமணர் என்றுதான் வரலாறு எழுதப்பட்டிருக்கிறது. சமணரோ, சைவரோ, பௌத்தரோ அதில் சம்பந்தப் பட்டிருக்கவில்லை. அப்படியானால் தோமையர் வரும்போது தமிழ்நாட்டில் இருந்த தமிழரின் மதம் எது? இந்தக் கேள்விக்கு விளக்கமான விடை வேண்டும். ஏனெனில் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, திருக்குறள், தொல்காப்பியம், நன்னூல், நாலடியார் இப்படி தமிழ் கருவூலங்கள் எதுவும் இன்று நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற வைதீக இந்து மதத்தவர் எவராலும் எழுதப்படவில்லை. ஏன் இலக்கணம் தந்த வீரமாமுனிவரும் நாவல் இலக்கியம் படைத்த மாயூரம் வேதநாயகம் பிள்ளையும் கூட இந்துக்களல்ல. ஆகவே தமிழன் மதம் எது ஆராயப்படவேண்டும்.



கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் 12.02.2006 அன்று நடைபெற்ற
வேல்அமுதன் தசாப்த நிறைவு (திருமண சேவை) விழாவில்
'லண்டன் தமிழர் தகவல்' ஆசிரியர் ஆற்றிய ஆய்வுரையின் ஒருபகுதி

அப்புறம் தமிழர்களின் தாயகம் பற்றிய ஒரு கலக்கம் இன்றுமிருக்கிறது. வரலாற்று ரீதியாகக் குமரிகண்டம்தான் என்ற தெளிவு நமக்கு வேண்டும். முதற்ச்சங்கம் இருந்த மதுரையும், இடைச்சங்கம் கண்ட கபாடபுரமும், குமரிக் கண்டத்திலதான் இருந்திருக்கிறன. மூன்று கடற்கோள்கள் பற்றிய குறிப்புக்கள் பண்டைய தமிழ்நூல்களில் காணக்கிடைக்கின்றன. முதற்கடற்கோளில் பஃறுளி ஆற்றுப்படுக்கையும், குமரிக்கோடும், கடலால் அள்ளிக் கொள்ளப்பட்டதின் பின்னர் அதில் தப்பிய தென்மதுரைதான் முதல் தமிழ்ச் சங்கத்தின் தோற்றத்தைக் கண்டது. கபாடபுரம் அழிந்தது இரண்டாவது கடற்கோளின் போதுதான். மூன்றாம்




## திருவண்ணாமலை

**திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம் பார்ப்பதற்கு கொடுத்து வைக்க வேண்டும். கார்த்திகை மாதம் வரும் கார்த்திகை அன்று திருவண்ணாமலை தீபம் நடைபெறும். இந்த நாட்களில் திருவண்ணாமலையை தரிசிப்பது மிகவும் நல்லது.**

## பிரதோஷம்

ஒவ்வொரு பிரதோஷ விரத காலங்களில் தஞ்சாவூர் பெரிய கோயில் நந்திக்கு பால் அபிஷேகம் நடைபெறும். இது ஒரு கண் கொள்ளா காட்சி. ஆன்மிக சுற்றுலா செல்பவர்கள் எப்படியும் ஒரு பிரதோஷத்துக்கு தஞ்சாவூர் பெரிய கோயிலை தரிசிக்க வேண்டும்.



தமிழச்சங்கம் பாண்டிய மன்னனால் உருவாக்கப்பட்ட மதுரையில் நடந்திருக்கிறது. வங்காள விரிகுடாவில் 400 யோசனை அகலமான பெரிய தீவுகள் நீண்டு அமைந்திருந்தன. மணிமேகலையில் இது 'வங்கக்கடலில் நாகநன்னாட்டு நானூறு யோசனை வியன்பாதலத்து வீழ்ந்து கேடெய்தும்' என்று வெளிப்படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். இங்கே தான் மகேந்திரமலை இருந்தது. முருகனும், சிவனும் இங்கே உறைந்திருந்ததாக ஆய்வுகள் இப்போ வெளி கொணரப்பட்டுள்ளன. திருவாசகத்தில் ''மன்னுமாமலை மகேந்திரம்'' என்ற குறிப்பு உள்ளது. பிற்காலத்தில் இதன் பெயர் மருவி மேரு என்றும் கயிலை என்றும் கருதப்பட்டது, என்கிறார் மயிலை வேங்கடசாமி. நெல்லை மாவட்டத்தில் பாயும் தாமிரபரணி என்ற பொருநை ஆறு இலங்கையிலும் பாய்ந்தது என்றும் அதனாலையே 'தாப்பிரப்பனே' என்ற பெயர் இலங்கைக்கு உண்டானதென்றும் கூறுகிறார் 'மெகஸ்தானிஸ்' என்ற கிரேக்க அறிஞர்.

ஈழம் என்ற சொல் மெசப்பதேமியாவில் (ஈராக்) காணப்படுகிறது என்கிறார் தலைவர் பழநெடுமாறனார். இலங்கையிலிருந்து சென்றவர்கள் அங்கு வாழ்ந்தார்களா என்பதற்க்கு சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை என்கிறார் அவர். ஆனால் வடஈழ மக்கள் அரேபியத் தொடர்பு உள்ளவர்களாகத் தெரியவில்லை என்கிறார் பேராசிரியர் இராமச்சந்திர தீட்சிதர். வடஈழ மொழி சுமேரியத்தைப் போல 'அலாறோடியன்' என்ற கூட்டத்தை சேர்ந்ததல்ல என்பது அவர் கருத்து. எனினும் சுமேரிய மொழியும், தமிழ் மொழியும் நெருங்கிய தொடர்புகள் கொண்டிருந்தன என்பது, தமிழ்ச் சொற்கள் பல சுமேரிய மொழியில் காணப்படுவதில் தெரிகிறது. அங்குள்ள திருமணச்சடங்குகளில் ஒரளவு தமிழர் பாணி காணப்பட்டிருக்கிறது. 'ஓமர்' காவியத்தில் கூறப்படுகிற 'திராய்' நகர ஆராய்ச்சியில் லிங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழகத்து ஆதிச்சநல்லூரில் முருக வழிபாட்டை ஞாபகப்படுத்தும் வேல், சேவல், காவடி என்பன பிலிப்பைன்ஸ் தீவுகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பண்டைய தமிழகத்துக்கு 1500 கி.மீ நீண்ட நெடுங்கடற்கரை இருந்திருக்கிறது என்கிறார் பண்டிதர் சவுரிராஜன். அறிஞர் வி.சி. கந்தையா அவர்களும் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

ஞானசம்பந்தரின் 'தோடுடைய சேவியன்' சுந்தரரின் 'பித்தா பிறைசூடி' மணிவாசகரின் திருவெம்பாவை ஆண்டாளின் திருப்பாவை என்பன தென்னாட்டின் சிறந்த எழுத்தில் வரையப்பட்டு இன்னம் தாய்லாந்து நாட்டின் அரச விழாக்களில் பாடப்படுகின்றன. டாக்டர் எச்.ஜீ.குவாரிட்டர் இதுபற்றி ஆய்வு வெளியிட்டிருக்கிறார். கம்போடியா, தாய்லாந்து, வியட்நாம், நாடுகளில் காரைக்கால் அம்மையாரின் கோயில்கள் காணப்படுகின்றன என்கிறார் அவர்.

நம்பிக்கைகள் ஒரு சமுதாயத்தின் கட்டுக்கோப்புக்கும் சகவாழ்வுக்கும் காரணமாகின்றது. ஆரம்பக் காலத்தில் அறிவுக்குப் பொருந்தக்கூடிய நம்பிக்கைகள் காலப்போக்கில் மக்களுடைய அறிவு வளர்ச்சிக்கும் எண்ணப் போக்குக்கும் அமைய மாறுபட்டு போகின்றன. அந்த இயல்புகள் சில வேளைகளில் மூடநம்பிக்கைகளாகவும் மாறிப்போய்விடுகின்றன. எனினும் அவை அந்தச் சமூகத்தின் கடந்த காலத்தை அறிய உதவியாக அமைகின்றன என்பதை மறுப்பதற்கில்லை. 'பியூனானில்' நடைபெறுகின்ற திருமணச்சடங்கில் வேட்டி, சேலை அணியும் வழக்கம் இன்று கூட இருப்பதாக அறிய முடிகிறது. கம்போடியாவில் திருமணத்துக்கும் பிறந்ததின விழாக்களில் பரிசளித்தல் இருக்கின்றன. 'கெமர்களில்' நாட்டியக்கலை நமது நாட்டியத்தை ஒத்திருக்கிறது. அங்கு அப்பமும் கொழுக்கட்டையும் விசேட உணவாக உள்ளன. நமது வெற்றிலை பாக்கு கலாச்சாரம் மலாக்கனவில் உள்ளது. பஞ்சாங்கம் பார்த்தலும் ஜாதகம் பார்த்தலும் வழக்கத்தில் உள்ளன. அங்கு

தீ மிதித்தலும் இருக்கிறது. பாலித்தீவில் அறுவடைத் திருவிழா (பொங்கல்) கொண்டாடப்படுகிறது. வாழ்வினை, மறுபிறப்பு, என்ற அச்சமூக நம்பிக்கைகள் நம்முடன் ஒத்துப்போகின்றன. யோனியோவில் தமிழ் மதங்களின் பெயர்கள் வழக்கில் உள்ளன. பியுனானின் பிரேத அடக்கம் சைவசித்தாந்த முறைப்படி உள்ளது. மியான்மாரில் பிரேதச் சடங்கின் பின் தலையை மொட்டையடித்தல், எலும்புகளை கலசத்தில் இட்டு ஈமக்கிரியைக்காகப் பாதுகாத்தல், என்பன தொடர்கின்றன. பிலிப்பைன்சில் சில இடங்களில் நமது 'பொற்தாலி'ப் பழக்கம் உண்டு என்கின்றனர். கி.பி.5ம் நூற்றாண்டுக் காலத்தில் நடராசர், காரைக்கால் அம்மையார் வழிபாடுகள் வழக்கில் இருந்திருக்கின்றன என்கிறார் பேராசிரியர் ஜீன் பிலியோசா.

இனி வேல்அமுதன் அவர்களின் பத்தாண்டுகள் தசாப்த - சகாப்தப் பணிகள் பற்றிப்பார்ப்போம். அவரை இலக்கியவாதியாகக் கண்டவன் திருமண சேவையை இயக்குபவராகப் பார்ப்பது இன்னொரு அவரது பரிமாணத்தின் மாற்றம் என்பேன். இங்கே திருமணத் தரகரா, பொருந்துநரா, ஆற்றுப்படுத்துநரா என்பது பற்றிய சில விளக்கங்களைச் சொல்ல வேண்டும். தரகர் என்பதன் அர்த்தம் என்ன? ஆடு மாடுகளையும் அஃ. றிணைப் பண்டங்களையும் விற்பனையாக்குவதுதான் தரகு என்பது. இதில் விலை ஏற்ற இறக்கம் பற்றிய உரையாடல் உண்டு. ஒரு பொருளை விற்றல் வாங்கலுக்கு உரிய பரிவர்த்தனை செய்பவர்தான் தரகர் என்றால் இரண்டு உயிர்களின் இணைப்பை உருவாக்குபவர் எப்படித் தரகராக முடிகிறது? அதுமட்டுமன்றி தரகர் என்பவரின் பணி அது ஒப்பேறுவதுடன் முடிவடைந்துவிடுகிறது. அதாவது ஒரு தரகர் தன் பங்கை வாங்கிக் கொண்டபின்பு அதில் தலையிடவோ, தாமதிக்கவே கூடவில்லை என்பதுதான் உண்மை. அது அந்த வீட்டில் வாசற்படியுடன் முடிவடையும் கடமை. எனவே அது வேல்அமுதன் பணியாக இருக்கவில்லை. ஆகவே அவர் தரகரல்ல.

அடுத்து திருமணப் பொருத்துநர் என்பது. பொருத்துதல் என்பது பொருந்தும் இரண்டை இணைந்துவிடுதல். அது பொருந்தாது எனினும் அதற்கேற்பச் சில மாற்றங்களைச்செய்து பொருத்தி விடுதல். அதாவது இரண்டு 'எஸ்லோன்' குழாய்களைப் பொருத்துவதற்க்கு - அவை சம அளவானவை எனினும் சிறிது சூடாக்கிவிட்டு ஒன்றில் ஒன்றைச் செருகிவிடுதல் நடக்கிறதே அதுபோன்றதா இது? மாற்றங்களைச் செய்து பொருத்திவிடுதல் மணவாழ்வின் எதிர்கால நன்மைகளைச் சிதைக்காத? இதை எண்ணுகிறார் வேல் அமுதன், என்பதால் இவர் பொருத்தநர் இல்லை என்கிறேன்.

அதன் பின் வரும் ஆற்றுப்படுத்துநர் என்ற பதத்தைப் பார்ப்போம். ஜாதகங்கள், சமூக அமைப்பின் பகுப்புகள், கல்வித்தரம், சோடிப் பொருத்தம், வயதுப் பொருத்தும், என்பன இசைவாக இருந்தாலும் வேல் அமுதன் வேறு பக்கத்தையும் பார்க்கிறார். நீண்ட விசாரிப்புகளை மேற்கொள்கிறார். இணைய உள்ள இரண்டு குடும்பங்களையும் ஒரு சேர சந்திக்கவிட்டு சம்பாசிக்கவிடுகிறார். அப்புறம் அந்த இணைப்பு இடறாது நிலைத்திருக்குமா என்று பார்த்து ஒருசுய தெரிவுமுறையை வெளிப்படுத்தி அவர்களின் எண்ணங்களை பகரவிடுகிறார். இது மற்றையவர்களை விட ஒரு மாறுபட்டத் தன்மை. வழிகாட்டற்றன்மை. இதனால் ஏற்படும் காலதாமதத்தால் சிலர் சலிப்படைவதும் அவரைக் குறை சொல்வதும் உண்டுதான். ஆனால் அதுதான் அவரின் ஆற்றுப்படுத்துநர் தன்மை. ஒன்றை நெறிப்படுத்தும் நேர்மை என்பேன். ஏனென்றால் தன்னால் முடித்து வைக்கப்பட்ட வாழ்வின் ஒப்பந்தங்கள் அனு ஒப்பந்தங்களாய் இன்றி உறவுகளாய் இருக்க வேண்டுமென்பதில் அவர் அக்கறை காட்டுகிறார். ஆகவே அவரை ஆற்றுப்படுத்துநர் என்பேன். அந்த நேர்மைதான் விளம்பரங்களில் தான் புகைப்படத்தை வெளியிடவும் தைரியந் தருகிறது என்னே.

- நன்றி

## பழனி



அறுபடை முருகன் கோவிலில் ஒன்று. இங்கு தைப்பூசம் மிகவும் விசேடமாகும். இங்கு தைப்பூசமும் பங்குனி உத்திரமும் விசேடமானது. தைப்பூசத்தின்போது இங்கு இலட்சக்கணக்கான மக்கள் கூடுவர். எல்லா நாட்களிலும் வழமைபோல் தங்கரதம் உண்டு, மாலைதோறும் மட்டும். தங்கரதம் பணம் கட்டி பக்தர்களால் நடத்தப்படுவது. தங்கரதம் பார்க்க வேண்டுமானால் மாலை 5 மணிக்கு கோவிலுக்கு செல்ல வேண்டியது அவசியம். தங்கரதம் எல்லா கோயில்களிலும் உண்டு, எல்லா கோயில்களிலும் எல்லா நாட்களிலும் நடைபெறும் என்று சொல்ல முடியாது.

# பாலுக்கு பாலகி



அவிய வைத்த பனங்கிழங்கை இறக்கி வைத்தாள் சுலோசனா. அடுத்த பனங்காணியில் மேயக்கட்டிருந்த பசுவின் குரல் இருள் சூழ்ந்து மாலை மறைவதை அவளுக்குக் கூறியது. 'அதையும் கன்றையும் வீட்டுக்கு கொண்டுவந்து பால் கறக்கவேண்டும். நாகேந்திரம் அண்ணை வீட்டுக்கு நேரத்தோடு பால்கொடுக்க வேண்டும். சரசக்காவும் கண்மணி மாமியும் பிந்தி முந்திப் பால் கொடுத்தாலும் அக்கறைப்படமாட்டார்கள், நாகேந்திரம் அண்ணை பிந்தினால் குறை சொல்லுவார்'. அந்த நினைவு கால்களுக்கும் கைகளுக்கும் சுறுசுறுப்பூட்டுகிறது. "பிருந்தா, வா பிள்ளை. மாடு, கண்டு கொண்டுவரணும் நான் மாட்டைக் கொண்டு வர நீ கண்டைக் கொண்டுவா" மகளை உதவிக்கு அழைத்தாள் சுலோசனா. "ஒவ்வொரு நாளும் கண்டு கொண்டுவர என்னக் கூப்பிடுங்கோ பால்மட்டும் தரமாட்டியள், எந்த நாளும் வெறுந்தேத்தண்ணிதான்." இருந்த இடத்தை விட்டசையாமலே பிருந்தா பதில் கூறினாள், சுலோசனாவின் மனம் பதைபதைத்தது. "என்ன செய்யிறது குஞ்சு. பால் மூண்டு வீட்டுகாரருக்கு குடுக்கவே போதாது". "கொஞ்சம் மிஞ்சினாலும் தம்பிக்குக் குடுக்கவேணும்," கோபம் கொதிக்க, அம்மாவின் விளக்கத்தைத் தொடரவிடாது இடைமறித்துக் கத்தினாள் பிருந்தா. அவளது நியாயமான கோபத்தைக் கண்டும் தன் இயலாமைக்காகவும் கண்கலங்கினாள் அந்தத்தாய். "பாலைக் குடுத்து வாங்கிற காசிலை தானே அரிசி, மா எல்லாம் வாங்கிச் சமைக்க வேணும், பிள்ளை வளர்ந்த பிள்ளைதானே, குஞ்சுக்கு எல்லாம் விளங்குந்தானே."

தாய் கெஞ்சாத குறையாகக் கெஞ்சினாள். அந்தப் பிஞ்சு உள்ளத்தில் என்ன சிந்தனையோட்டம் ஏற்பட்டதோ? அவள் எழுந்து தாயுடன் செல்லத் தயாராகினாள். "என்ரை செல்லக் குஞ்சு" பிருந்தாவைக் கட்டி அணைத்து முத்தமிட்டாள் சுலோசனா. இருவரும் பனங்காணியை நோக்கி நடந்தார்கள். பசுவையும் கன்றையும் வீட்டிற்க்குக் கொண்டுவரும் போதும், கன்றுடன் துள்ளலும் ஓட்டமுமாக பிருந்தா வந்து கொண்டிருந்தாள். "கவனங் குஞ்சு கண்டு ஓடிச்சுதெண்டால் விழுந்துபோவாய்". மற்றொரு பயமறியாத இளங்கன்றாகத் துள்ளிய மகளுக்கு சுலோசனா அடிக்கடி கவனமாக இருக்கும்படி அறிவுறுத்திக் கொண்டு வந்தாள். கன்றுடன் ஓடிய பிருந்தாவின் கால்களுக்கு நடுவே மரவேரொன்று குறுக்கிட்டு அந்தச் சின்னப் பாதங்களைத் தட்டிப்பார்த்தது. பிருந்தா விழுந்து கிடந்து வீரிட்டு கதறினாள், "சொன்னனான். கேட்டாத்தானே." பதற்றமும் கோபமுமாக ஓடிச்சென்று மகளைத் தூக்கி அப்பியிருந்த மண்ணைத் துடைத்துவிட்டுப் பார்த்தால் கைகளிலும் கால்களிலும் உரசல் காயங்கள் கண்களிற்பட்டன. வீட்டை அண்மித்துவிட்டபடியால் பசு தனது இடத்திற்க்குச் சென்று நின்றது.

மகளின் காயங்களைக் கழுவி மருந்திட்டு விட்டு பசுவின் கொட்டிலுக்குச் சென்று பார்த்தால் கன்று பால் குடித்துக்கொண்டு நின்றிருந்தது. அவசர அவசரமாக அதை இழுத்துக் கட்டிவிட்டு, செம்பை எடுத்து வந்து பாலைக் கறந்தாள். என்ன அவசரப்பட்டென்ன? பால் குறைந்தது. 'இண்டைக்கு ஒரு வீட்டுக்குத்தான் பால் குடுக்கலாம்' பெருமூச்சாக நினைவு வெளிவந்தது. போத்தலைக் கழுவிப் பாலை ஊற்றி வைத்துக் கொண்டிருக்கையில் "அம்மா, தாங்கமுடியாமல் நோகுதம்மா" வலது கையை இடது கையால் பிடித்துக் கொண்டு பிருந்தா அழுதாள். பாலை வைத்து விட்டுவந்து பார்த்ததால் கை வீங்கிக்கொண்டு வருவது தெரிந்தது. 'இருண்டு விட்ட இந்த நேரத்தில் என்ன செய்வது? தோட்டத்திற்க்குப் போன சபேசனும் வந்து சேரவில்லையே!' சுலோசனாவின் கணவன் சபேசன் எங்கோ வேலை செய்வதற்குப் போய்விட்டு வந்து தன் தோட்டத்தில் வேலை செய்யவென்று போனவன். இனித் தவறணைப் பக்கமும் போய்த் தான்வருவான். "அவரெங்கே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போறது?" ஒரு தீர்மானத்திற்க்கு வந்த மனம் மகளுக்கு என்ன செய்யலாம்? என்ற தவிப்பில் அவலப்பட்டது. "சுலோ, சுலோ." வாசலிலே கண்மணிமாமியின் குரல் கேட்டது. "வாறன் மாமி". பாற்போத்தலையும் தூக்கிக்கொண்டு வாசலுக்கு வந்தாள் சுலோசனா. "மாடு கொண்டுவரேக்கை பிருந்தா விழுந்துபோனாள் மாமி. அந்தப் பிலாதியிலை நிக்க, பாலைக் கண்டு குடிச்சிட்டுது. ஒருபோத்தல்

தான் கறந்தனான் நாகேந்திரம் அண்ணை தான் புறுபுறுப்பர். என்ன செய்ய? அவருக்கும் சரசக்காவுக்கும் பாலில்லை எண்டு சொல்லி விடுங்கோ'' சொல்லும்போதும் கவலை தலை நீட்டுகிறது.

''நாகேந்திரத்தான் பிள்ளைக்கொண்டு பால் வாங்குகிறவன். அவனுக்கு இதைத் குடுக்கிறன். சரசுவிட்டைச் சொல்லிவிடுகிறன்'' மாமிதானாகவே முன்வந்து நாகேந்திரம் அண்ணைக்கு விட்டுக்கொடுத்ததும் உள்ளுக்கிருந்த மெல்லியவலி நின்றது போன்ற உணர்வு. மாமிக்கு நல்லமனம். நாகேந்திரம் அண்ணையின் பிள்ளைக்காக விட்டுக் கொடுக்கிறாள். நாகேந்திரம் அண்ணை பிள்ளைக்கென்று பால் வாங்குகிறார். மாமி அவளுக்காக பாலைக் கொடுகிறாள். அந்தப் பிள்ளை புவனா பிருந்தாவோடை தான் படிக்கிறாள். கண்கலங்கிய பிருந்தாவின் கோபம் பரவிய முகம்... மனதிற்குள் மின்னல் புகுந்து வெளியேறுகிறது. ''அதுசரி பிருந்தாவுக்கென்ன பெரிய காயமோ? அழுது கேட்குது. மாமிக்கு பிருந்தாவிலும் கரிசனந்தான். ''காலிலும் கையிலும் உரசல் காயம். வலது கையிலை வீங்கியிருக்குது. அதிலைதான் நோகுதெண்டு அழுகிறாள்''. ''எங்கை பிள்ளையைப் பாப்பம்.'' உள்ளே வந்து, அவளை ஆதரவாக அணைத்து, ''பிள்ளைக்கு எங்கை நோகுது?'' என்று அன்பாக மாமி விசாரிக்க, பிருந்தாவின் விம்மலும் அழுகையும் அதிகரித்தன. பிருந்தா கையை நீட்டி மாமிக்கு நோவுள்ள இடத்தை காட்டுகிறாள். மாமி மெதுவாகத் தடவ, ''ஐயோ, அம்மா'' என்று பிருந்தா கதறினாள். ''இது அடியுண்ட நோவில்லை. எலும்பிலை வெடிப்போ முறிவோதான்.'' மாமி தன் அனுபவத்தைக் கூற, சுலோசனாவின் கலக்கம் அதிகமாகியது. இப்ப எங்கை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப் போறாய். நோவெண்ணெய் கொண்டந்து தாறன். போட்டிட்டு பனடோலும் குடு. கையை அசைக்காமல் வைச்சிரடி பிள்ளை. காலமைக்கு ஆஸ்பத்திரிக்குப் போய் காட்டு.'' மாமி வெளியே வரவும் சுலோசனாவின் மகன் சங்கரனுடன் அவளின் அம்மா உள்ளே வந்தாள். நடந்தவற்றை சுலோசனா தாயிடமும் விவரித்தாள்.

''என்ரை செல்லம் விழுந்துபோனாளோ? கவனமாய் வரக்கூடாதேடா?'' என அம்மம்மாவும் பிருந்தாவை மடியிலிருத்தி, அணைத்து ஆறுதல் கூறினாள். ''பனம்பாத்தி கிண்டினனீங்களெல்லே. பனங்கிழங்கை என்ன செய்யப் போகிறாய்?'' ''அதை அவிச்சுப் போட்டேனம்மா. இவளை விட்டிட்டு இப்ப ரெண்டும் செய்யேலாது. இரவுச் சாப்பாடு செய்யப் போகவே விடாள்போலை கிடக்கு,'' பனங்கிழங்கின் நினைவும் வந்து மேலும் கவலை சேர்கிறது. நான் பிள்ளையோடை இருக்கிறன். புட்டைக்கிட்டை அவியன். பிறகு நான் போய் கொப்பாவுக்குச் சாப்பாட்டைக் குடுத்திட்டுவந்து ஏதுஞ் செய்யக் கூடியதைச் செய்யிறன்.'' பாவம் அம்மா. அவளுக்கு இன்னும் ஓயாத கைகள். பிருந்தாவும் உதவிசெய்ய இரவு குந்து வாங்கி காலையில் காயவிடலாமென எண்ணி கிழங்கை அவித்தாள். இப்பொழுதும் அம்மாவுக்கு வேலையாகிப் போயிற்று. பிருந்தா இரவு சரியாக உறங்கமுடியாது எழுந்தெழுந்து அழுது கொண்டேயிருந்தாள். மாமி தந்த நோவெண்ணையும் பனடோலும் அவளது நோவைக் குறைத்ததாகத் தெரியவில்லை. காலையில் அம்மாவின் உதவியுடன் வேலைகளை முடித்து, மதிய உணவையும் சேர்த்து தயாரித்து வைத்துவிட்டு வைத்தியசாலைக்குப் போக ஆயத்தமானாள். சங்கரனையும் அம்மாவிடம் ஒப்படைத்து விட்டு சபேசனின் சைக்கிளில் சுலோசனாவும் பிருந்தாவும் புறப்பட்டனர். வெளிநோயாளர் பகுதியில் காத்திருந்து வைத்தியசாலை நடைமுறைகளின்படி பிருந்தாவைக் காட்டியபோது வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற வேண்டுமென்று கூறிவிட்டார்கள். சபேசன் வீட்டிற்குப் போய் தேவையான பொருட்களை எடுத்துவந்தான்.

பிருந்தாவின் நோ வைத்தியசாலையில் அளித்த சிகிச்சையால் சற்றுக் குறைந்திருக்க வேண்டும். அவள் கட்டிலில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தாள். நேரம் மாலையை அண்மித்துக்கொண்டிருந்தது. 'வீட்டில் அவர் எப்படி எல்லா வேலைகளையும் கவனிக்கப்போகிறாரோ? ஏதோ அரை குறையாகச் சமையல் செய்வார். ஆடு, மாடு, கோழி என்று எல்லாம் தனியாகப் பார்கிறது கஷ்டந்தான். பால் கறந்தாலும் போத்தலுகள் கழுவி பால் ஊற்றி மூன்று வீடுகளுக்கும் கொடுக்கவேண்டும். கோழிகள் முட்டையிட்டதும் எடுத்து வைக்க வேண்டும். கோழிக் குஞ்சுகளைத் திறந்துவிட்டு கவனமாய் அடைக்க வேண்டும். புழுக்கொடியல் காயவிட்டெடுக்கிற வேலையும் சேர்ந்து விட்டது. சங்கரனைப் பார்கிறது பெரியவேலை எல்லா வேலைகளோடையும் இவருக்கு அது சரியான கஸ்டம்.

## திருவண்ணாமலை

ஒவ்வொரு பௌர்ணமியும் திருவண்ணா மலையில் கிரிவலம் நடைபெறும். கிரிவலம் நடைபெறும் இத்தினத்தில் திருவண்ணா மலையில் நிற்பது விசேடமாகும். நினைத்தாலே முக்தி தரும் தலம் திருவண்ணாமலை. இங்கு தரிசனம் செய்வது அளவிலா பலன்களை அள்ளித்தரும்.

அம்மாவுக்குத் தன்னுடைய வீட்டு வேலைகள், சமையல் வேலைகளோடு அவனை முழுமையாகக் கவனித்துக்கொள்வது இயலாது. "பாலும் முட்டையும் எடுக்கிறவை வாங்கோ." நர்ஸம்மாவின் குரல் வீட்டைச் சுற்றியலைந்த அவளது நினைவுகளை வைத்தியசாலைக்குக் கொண்டுவந்தது. "கல்பனா, அகல்யா, மீனாட்சி, கண்ணம்மா... அந்த அம்மா பட்டியலிட்ட பெயர் வரிசையில் பிருந்தாவின் பெயரில்லை. அழைக்கப்பட்டவர்கள் கோப்பைகளுடன் போய் நின்றனர். இந்த ஆரவாரத்தில் பிருந்தா கண் விழித்து, நடப்பவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தாள். "அம்மா எங்களுக்குப் பாலும் முட்டையும் தராயினமே?" மகளின் ஏக்கம் தாயைக் கரைத்தது. "எப்படி வாங்கிறதெண்டு விசாரித்து நாங்களும் வாங்குவம்." மகளைத் தேற்றினாள் அம்மா. மனதிற்குள்ளும் அதை நிறைவேற்றுவதென்று தீர்மானித்துக்கொண்டாள்.



## திருத்தணி

இங்கு சூரசம்ஹாரம் நடைபெறுவது இல்லை. அறுபடை வீட்டில் அமைதியான படைவீடு திருத்தணி. ஆடிக்கார்த்திகை இங்கு விசேடமானது. திருப்பதிக்கு செல்லும் பக்தர்கள் திருத்தணியையும் தரிசிக்க செல்வது வசதியானது.

"பாவம் பிருந்தாவுக்கு பால் குடிக்க நல்ல விருப்பம். பணவசதியில்லாததாலை என்னால் அவளுக்கு பால் குடுக்க முடியேல்லை." சுலோசனா தன் தரித்திரத்தை நொந்து கொண்டாள். இது அவளுக்கு அடிக்கடி வீட்டிலே ஏற்பட்ட ஏக்கம். அது இங்கேயும் வந்து தொற்றிக்கொண்டது. 'இது அரசாங்க ஆஸ்பத்திரி எங்களைப் போலை கஷ்டப்பட்டவைக்குத்தான் குடுப்பினும், பிருந்தாவுக்கும் வாங்கிக் குடுக்கலாம்.' "கொஞ்சப் பால் மிஞ்சியிருக்கு ஆருக்கும் வேணுமோ?" பாலைப் பகிர்ந்து கொண்டிருந்த அம்மா உரத்த குரலில் கேட்டாள். அதைக் கேட்டதுமே கோப்பையை எடுத்துச் செல்ல சுலோசனாவின் அங்கங்கள் ஒத்துழைக்கவில்லை. "ஒவ்வொரு நாளும் மிஞ்சுந்தானே, முதலே இங்கை இருக்கிறவை யாரும் வாங்கக்கூடும், எல்லோருக்கும் முன்னாலை போய் கிடைக்காட்டில்..." மனம் தயங்கியது. "பால் வாங்காத சின்னப்பிள்ளைகளுக்குக்குடும்." நர்ஸம்மா கூறிக் கொண்டே தனது இருக்கைக்குத் திரும்பினாள். சுலோசனா அவசரமாகக் கோப்பையை எடுத்துக் கொண்டு போனாள். பிருந்தாவின் கண்களில் ஆவலின் கீற்று மின்னியது, பால் பரிமாறிய அம்மா பின்புறம் போவதைக்கண்டு சுலோசனாவும் பின்னே விரைந்தாள். "பாலிருந்தால் பிள்ளைக்குத் தாங்கோ," "கூப்பிடேக்கை எங்கை போனீங்கள்? பால் வேணுமென்டா கூப்பிட்ட உடனை வந்திருக்கவேணும். நீங்கள் வருமட்டும் வைச்சுப் பார்த்துக் கொண்டிருந்தால் நாங்கள் அடுத்த வேலை செய்யிறேல்லையே? இப்பதான் பாலை ஊத்திப் போட்டுக் கழுவினனான" அவள் அணிந்திருந்த சீருடை அவளுக்குப் பொருத்தமில்லாதது போல சுலோசனாவுக்குத் தோன்றயது.

-யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

### எட்மண்ட் சமரக்கொடி

தாம் சொல்வதைக் கடைபிடித்த உண்மையான அரசியல்வாதி. இளம் வயதிலிருந்தே அவரிடம் அந்தக் குணம் இருந்தது. நாங்கள் இருவரும் மாணவக் காலத்தில் நெருங்கிய நண்பர்களாக இருந்தோம். சோசலிசம் தொடர்பான பாடக் குறிப்புக்களைக் கூட நாங்கள் பகிர்ந்து கொண்டதுண்டு.

எட்மன்ட் சமரக்கொடி ஒரு சிங்களத் தனவந்த குடும்பத்திலிருந்து வந்தாலும், கல்கிசை போன்ற இடங்களில்- சேரிகளில் மீன்பிடிக் கிராமங்களிலும் பணியாற்ற வேண்டியிருந்த காலங்களில் அவர் ஒருபோதும் மூக்கை சுழிக்கவில்லை. உண்மையான சோசலியவாதி என்ற நடைமுறையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என வித்தியாசத்துடன் மக்களை அவர் நோக்கியதில்லை. இவர்கள் எல்லோரும் அவரைப் பொறுத்தவரை மனிதர்கள் தாம்.

எனவே 1958ல் சிங்களவர்களாகிய தமது இனத்தவர்கள் தமிழர்களுக்கு இழைத்துவிட்ட கொடுமைகளைக் கண்டு இவர் கொதிப்படைந்ததில் ஆச்சரியமில்லை.

(V. Navaratnam, 'The Fall And The Rise Of Tamil Nation'.)

# இலங்கையின் தற்போதைய நிலவரம் தொடர்பாக குமுதம் ரிப்போர்ட்டர் இமுதில் சோலை என்பவர் எழுதிய கட்டுரை

அமெரிக்கா அமைக்கும் ஆயுத வலைப்பின்னல் இந்தியாவிக்கும் ஆபத்தானதாகலாம்.

மீண்டும் ஈழத்தமிழர்கள், அகதிகளாக ஊமை மனிதர்களாக இராமேஸ்வரம் வரத் தொடங்கிவிட்டனர். இப்போது ஈழம் அமைதியாகத்தானே இருக்கிறது? ஏன் புலம் பெயர்ந்து வருகிறீர்கள் என்று இங்குள்ளவர்கள் விசாரிக்கிறார்கள்.

இப்போது போர் மூளவில்லைத்தான். ஆனால் போர்ச் சூழலை சிங்கள இராணுவம் வெகு வேகமாக உருவாக்கி வருகிறது. ஆங்காங்கே தமிழ் இளைஞர்களை சிங்கள இராணுவம் பிடித்துச் செல்கிறது. பலர் வீடு திரும்புவதே இல்லை. பாடசாலைகளை மூடுகிறார்கள். மாணவர்கள் பாதிக்கப் படுகிறார்கள். பெண்கள் எப்போதுமே ஆபத்தில்தான் இருக்கிறார்கள். பிள்ளைகளையாவது படிக்கவைக்க வேண்டும் என்றுதான் இரவோடு இரவாக இங்கு வருகிறோம் என்று அவர்கள் சோகத்தை பிழிகிறார்கள்.

இன்னொரு பக்கம் ஈழப் போராளிகளுக்காகவும், ஈழத்தமிழர்களுக்காகவும் பாடுபடுகிற பலர் சுட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அந்தக் கொலைகார முகமூடி மனிதர்கள் யார் என்பது சிங்கள இராணுவத்துக்குத் தெரியும். அவர்கள் எந்தக் கூண்டிற்குள் இருந்து திறந்துவிடப்படுகிறார்கள் என்பது ஈழத்து மக்களுக்குத் தெரியும்.

ஈழப் போராளிக்கு எதிராக ஏற்கனவே இலங்கை அரசும் இராணுவமும் சில குழுக்களை உருவாக்கின. இப்போது இன்னொரு குழுவும் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே உருவாக்கப்பட்ட குழுக்கள் முடமாகிவிட்டன. புதிய குழு மட்டும் தீட்டிய மரத்தையே பதம் பார்க்கத் துடிக்கிறது.

அந்தக் குழு எங்கிருந்து செயல்படுகிறது என்று கேட்டால், அப்படி ஒரு குழு இருக்கிறதா என்று இலங்கை அரசு திரும்பக் கேட்கிறது. இரை போடும் மனிதனுக்கு பருந்தை அடையாளம் தெரியவில்லை என்று சொன்னால் யார் நம்புவார்கள்?

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் கருணா குழு எங்கிருக்கிருக்கிறது? என்று இலங்கை அரசைக் கேட்டார். சாமி சத்தியமாய் தங்களுக்குத் தெரியாது என்று புத்தர் மீது அரசு சத்தியம் செய்தது.

ஆனால் கிழக்கு மாகாணத்துக்கு அவர் சென்றார். கருணா குழு எங்கிருக்கிறது? என்று இலங்கை இராணுவத்தைக் கேட்டார். சரியான பாதையை இராணுவம் தெளிவாக அடையாளம் காட்டியது. அங்கே எப்படி போக வேண்டும் என்றும் கூறியது.

ஆயுதம் ஏந்திய சிறிய சிறிய குழுக்களை கலைக்க வேண்டும் என்பது போர் நிறுத்த உடன் பாட்டின் ஓர் அம்சமாகும். ஆனால் அப்படி எந்தக் குழுவையும் இலங்கை அரசோ இராணுவமோ கலைக்கவில்லை. அதற்கு மாறாக, நொண்டிகளுக்குத் தீனி போட்டு வளர்க்கின்றன. இதயத்தை இழந்து விட்ட இன்னொரு தமிழனே, ஈழத் தமிழனை படுகொலை செய்ய வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். வாடகை மனிதர்களுக்கு வீரம் என்பது எள் முனையளவும் இருக்காது என்பது அவர்களுக்குப் புரியவில்லை. சர்வ ஆயுதங்களையும் தரித்த இலங்கை இராணுவம் சாதிக்க முடியாததை இந்தச் சப்பாணிகளா சாதிக்க முடியும்.

இலங்கை இராணுவம் தர்ம கோடுகளை தார்பூசி அழித்துவிட்டது. போர் நிறுத்த உடன்பாட்டை மதிப்பதே இல்லை. சப்பாத்துக் கால்களால் மிதிக்கிறது. இதனை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இலங்கை அரசுக்கு எடுத்துக் கூறிவிட்டனர்.

அந்த அரசு என்ன செய்கிறது? பாராளுமன்றத்தை ஈழப்போராளிகள் தாக்குகிறார்கள் என்று கூட்டத்தையே தள்ளி வைத்து விட்டது. பரிதாபம், கண்ணாடியில் தெரிகிற தங்கள் உருவங்களைப் பார்த்தே கிலி கொள்கிறார்கள்.

வட, கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் வன்முறைகளை இலங்கை அரசு தடுத்து நிறுத்த வேண்டும். அங்கே போர் நிறுத்த உடன்பாட்டை சீர்குலைக்கின்ற சக்திகளை அடக்க வேண்டும். இல்லையெனில் மீண்டும் போர் மூள்வதை தடுக்க முடியாது என்று கண்காணிப்புக் குழு பேச்சாளர் எச்சரித்திருக்கிறார்.

இன்றைக்கு இலங்கை எரிமலையின் முகட்டில் அமர்ந்திருப்பதற்கு இலங்கை இராணுவமும் அந்த இராணுவம் தயார்படுத்தும் சிற்சில குழுக்களும்தான் காரணம் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கூறுகிறது.

இன்றுவரை, ஈழப் போராளிகளை அந்தக் குழு குற்றம் சாட்டவில்லை. தங்கள்மீது பழி படிந்துவிடக்கூடாது என்பதற்காக, துரோகிகளின் தாக்குதலையும் போராளிகள் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையை போர் விளிம்பில் நிறுத்தியவர்களை இன்னும் அடையாளம் காண முடியவில்லை என்று இராணுவமும் பொலிசும் கூறுகிறது. அவர்களே வளர்த்த நாகப்பாம்புகளை அவர்களுக்கே அடையாளம் தெரியவில்லை என்பதை உலகம் நம்பத் தயாராக இல்லை.

ஒருபக்கம் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று இலங்கை அரசு கூறுகிறது. இன்னொரு பக்கம், போர் நிறுத்த உடன்பாடு மனநிறைவு அளிக்கவில்லை என்று சிங்கள இனவாத

அமைச்சர்கள் கூறுகிறார்கள். இவர்கள் சமரசத்திற்கும் தயாராக இல்லை. இவர்களுடைய இராணுவம் போருக்கும் தயாராக இல்லை. தனித்தனியாக இயங்கும் சில தமிழ் குழுக்களை ஏவி விட்டே ஈழப் போராளிகளை அழித்துவிடலாம் என்று தவறாக கணக்குப் போடுகிறார்கள்.

போர் நிறுத்த உடன்பாட்டுக்குப் பின்னர் தொடர்ந்து ஈழ மக்களும் போராளிகளும்தான் தாக்கப்படுகிறார்கள். கடற்பரப்பில் தங்களின் சக்தி என்ன? வான்வெளியில் தங்களின் வல்லமை என்ன? என்பதை போராளிகள் மெய்ப்பித்த பின்னர், உடன்பாட்டை ஈழம் ஏற்றுக் கொண்டது. தோல்வி முனையில் நின்று உடன்பாட்டுக்கு தலை அசைக்கவில்லை.

இராணுவமும் அதன் பொம்மைக் குழுக்களும், அவ்வப்போது சீண்டுவதை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்துக்கு ஈழப் போராளிகள் கொண்டு வருகிறார்கள். அதனை அந்தக் குழு இலங்கை அரசிடம் கேட்கிறது. அந்த அரசோ எரிச்சல் கொள்கிறது. இப்போது நோர்வே மீதே நம்பிக்கை இல்லை. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தேவையில்லை என்று சிங்கள இனவாதிகள் சீறுகிறார்கள்.

அதே சமயத்தில் நோர்வே மீதோ போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மீதோ இன்றுவரை இலங்கை அரசு நேரடியாக குற்றம் சாட்டவில்லை. அந்தக் குழு மீது தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று இருதரப்பும் தெரிவித்தால்தான் அந்தக் குழு வெளியேறும். இலங்கை இராணுவத்தின் குட்டிச்சாத்தான் வேலைளை அந்தக் குழு மூலம்தான் ஈழப் போராளிகள் அம்பலத்துக்குக் கொண்டு வருகிறார்கள்.

இன்றுவரை ஈழப் போராளிகளை போர் நிறுத்தக் குழு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தவில்லை. ஆனால், இலங்கை இனப்பிரச்சனைக்கு ஈழப்போராளிகள் தான் காரணமென எச்சரிக்கை விடுகிறார் சர்வதேச சட்டாம்பிள்ளை. சர்வதேச கசாப்புக் கடைக்காரர் சைவம் பேசுகிறார்.

ஈழத்து மக்களையும், போராளிகளையும் இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதுவர் இப்படிக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறார். அது அவருடைய வேலையல்ல. ஆனாலும் தமது வல்லாதிக்கத்தை நிலைநிறுத்த தமது தூதுவர்களையே அமெரிக்கா ஏவி விடுகிறது.

இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதுவர் மத்திய அரசையே எச்சரிக்கிறார். எந்தப் பிரச்சினையில் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கிறார். இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதுவரோ ஈழத்து மக்களின் உரிமைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்துகிறார். நரிகள் நாட்டாண்மை செய்கின்றன.

திருகோணமலையில் தனது இராணுவத் தளத்தை அமைக்கத் தொடர்ந்து அமெரிக்கா முயற்சித்து வருகிறது. அதற்கு எதிராக இருப்பவர்கள் ஈழப் போராளிகள்தான்.

எனவே, சிங்கள இனவாதத்துக்கு ஆதரவாக, ஈழமக்களுக்கு எதிராக அமெரிக்கா குரல் கொடுக்கிறது. ஈழப் போராளிகளுக்கு எதிராக அமெரிக்கா, சிங்கள இராணுவத்துக்கு ஆயுதங்களை அள்ளித் தருகிறது. முடியாட்சியை முடிவுக்குக் கொண்டுவர, நேபாளத்தில் போரிடும் மக்களுக்கு எதிராக தமது ஆயுதக் கிடங்கை மன்னருக்காக திறந்து விடுகிறது. இன்றுவரை, இராணுவத்தின் கோரக் கால்களில் விழிபிதுங்கி நிற்கும் மியான்மர் ( பர்மா ) மக்களுக்கு எதிராக இராணுவத்துக்கு துப்பாக்கிகளைத் தூக்கித் தருகிறது.

அமெரிக்கா நம்மைச் சுற்றி வளைக்கும் இந்த ஆயுத வலைப்பின்னல், ஒரு நாள் இந்தியாவை அச்சுறுத்துவதற்குப் பயன்படும்.

இந்திய அரசு என்ன செய்ய போகிறது?



## சிதம்பரம்

தரிசிக்க முக்தி தரும் தலம். இங்கு நடராஜ பெருமான் தான் மூலவர். வருடத்தில் இரண்டு தினங்களில் மூலவர் உற்சவராக புறப்பட்டுச் செல்வார். ஆனி மாதம் வரும் உத்தரம். மார்கழி மாதம் வரும் திருவெம்பாவை ஆருத்ரா தரிசனம். இந்த இரண்டு நாட்களிலும் சிதம்பரத்தை தரிசிக்கும் வகையில் சுற்றுலா அமைந்தால் நன்றாக இருக்கும்.

தமிழ் நாட்டில் ஆன்மிக சுற்றுலா செல்வதற்கு ஏற்ற காலம் ஐப்பசியிலிருந்து பங்குனி வரையிலான காலம். ஐரோப்பிய மக்களுக்கான காலம் எனலாம். இலங்கையிலிருந்து செல்பவருக்கு இது பொருத்தமில்லை. ஏப்ரம், மே, ஜுன் மாதம் கடும் வெயில். இந்த மாதங்களை தவிர்ப்பது நல்லது.

# மலையகத்திலிருந்து அரசியல் நரித்தந்திரம்

இலங்கையில் மலையகத் தமிழரை பிரதிநிதித்துவப்படுத்தும் இரு பிரதான கட்சிகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கூட்டணிக்குள் ஏறிக் குந்துவதற்குத் திடீரென எடுத்த முடிவு வடக்குகிழக்குத் தமிழர்களைப் பொறுத்த வரை அதிர வைத்த - அசர வைத்த - ஒரு முடிவாகும். ஆனால் இந்தக் கட்சிகளின் கடந்தகாலக் குத்துக்கரணங்களை சினத்துடன் பார்த்து, அவதானித்து வந்த நோக்கர்களுக்கு இது ஒன்றும் புதுமையான விடயம் அல்ல. எதிர்பார்க்கப்பட்ட ஒரு 'பல்டி' தான். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் ஆதரித்த ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க, தமது எதிர்பார்ப்புக்கு மாறாகத் தோற்றுப் போனதால் அதிர்ச்சியடைந்த இந்த இரண்டு கட்சிகளுமே - இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி இரண்டுமே - ஜனாதிபதித் தேர்தல் முடிவு வெளியான அடுத்த நாளே புதிய அதிகாரத்தின் பக்கம் ஒட்டிக்கொள்ள ஆலாயப் பறந்தமை அறிந்த விடயம் தான். 'ஒப்புக்குச் சப்பாணி போல' அப்போது அந்தச் செய்திகளை இரண்டு கட்சிகளின் தலைவர்களும் மறுத்த போதிலும், அப்படி ஒட்டிக் கொள்வதற்காக அவர்கள் அலையாய் அலைந்தமை ஊடக வட்டாரங்களில் ஆதாரங்களுடன் அடிபட்ட செய்தி.

அப்படி அலைந்தவர்கள் இப்போது சுமார் மூன்று மாதம் கழித்துப் போய் ஒட்டிக்கொண்டதில் என்ன புதுமை இருக்கிறது என்ற கேள்வி எழுகிறது. ஜனாதிபதித் தேர்தலில் வென்ற மஹிந்த ராஜபக்ஷ, இந்த இரண்டு கட்சித் தலைவர்களையும் சந்திக்கக்கூட மறுத்து உதாசீனம் செய்து, ஒதுங்கிய நிலையில்- புதிய அதிகாரத் தரப்போடு ஒட்டிக்கொள்ள வாய்ப்பில்லை என்ற நிலைமை உறுதியான போது- அதிலிருந்து மீண்டு, சிங்கள அதிகாரத் தலைமையின் கடைக்கண் பார்வை தமது தரப்பு மீது விழுவதற்காக பரந்துபட்ட தமிழர் ஐக்கியம் ( Grand Tamil Alliance ) என்ற கோஷத்தை இந்த இரண்டு கட்சிகளின் தலைவர்களும் வசமாக - அரசியல் சந்தர்ப்பவாதமாக - பயன்படுத்திக் கொண்டமை மிக மோசமானத் தப்பாகும்.

'பரந்துபட்ட தமிழர் ஐக்கியம்' என்ற பிரகடனத்தை முதலில் வெளியிட்டு சிங்களத் தரப்புக்கும், அயல் நாடான இந்தியாவுக்கும், அதிர்ச்சி வைத்தியம் செய்து - ஈழத் தமிழர்களும், மலையகத் தமிழர்களும் ஒன்றுபட்டு - ஓரணியில் - செயற்படப் போகிறார்கள் என்ற படத்தை வெளியே காட்டுவதற்காக - கிளிநொச்சிக்கு காவடி தூக்கி - அதற்கான ஏற்பாடுகளை மும்முரமாக செய்பவர்கள் போல பந்தாபண்ணி - அந்த ஐக்கியம் சிங்களவர்களுக்குப் பெரும் தலையிடியை ஏற்படுத்தும் என்று கொழும்புத் தலைமைக்கு உணர்த்தி - அதன் மூலம் கொழும்பு ஆட்சித் தலைமையின் காலடியில் தாம் ஒதுங்குவதற்கு ஓரிடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கின்றன இவ்விரு கட்சிகளும். ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்ட சக்தி வலிமைபெற்று திண்ணியதாக இருப்பதும், தென்னிலங்கைக்குப் பெரும் தலையிடியாக விளங்குவதும், அரசியல் அரிச்சுவடி படிக்காதவர்களுக்குக் கூடப் புரிந்த அம்சம் - அந்த சக்திகளுடன் போய் ஒட்டிக் கொண்டு - ஐக்கியமாகச் செயற்படப் போகிறோம் என்பதைக் காட்டி தமது மக்களுக்காக ஏதேனும் பயனுள்ள விடயத்தை இக்கட்சிகள் இரண்டும் சாதித்திருந்தால் அது தப்பில்லை. மாறாக, அந்தச் சிங்களத் தலைமைகள், தம்மை அந்தத் தலைமைகளின் பங்காளர்களாகச் சேர்த்துக் கொள்வதற்கு அந்தந்த தலைமைகளோடு உயிரும், உதிரமும் கொடுத்துப் போராடி வரும் சக்திகளையே பயன்படுத்தியிருப்பது அரசியல் நரித்தந்திரமின்றி வேறில்லை.

இதில் ஒரு வேடிக்கை "நாம் (சிங்கள) அரசுத் தரப்போடு சேர்ந்து போட்டியிடத் தயார். ஆனால் எங்கள் பக்கத்திலிருந்து 'குப்பை' ஒன்று குத்துக்கரணம் அடித்து அரசுப் பக்கம் சேர்ந்துள்ளது. அந்தக் குப்பையை அரசுத் தரப்பு கூட்டி வெளியே தள்ளுமானால் நாம் அரசுத் தரப்போடு இணைந்து உள் ஊராட்சித் தேர்தலில் போட்டியிட இணங்குவோம்". - என்று கூறியிருந்தார் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஒருவர். அவர் 'குப்பை' என்று வர்ணித்த வடிவேல் சுரேஸ் எம்.பி. இப்போதும் அரசில் பிரதி அமைச்சராகப் பதவி வகித்துக் கொண்டிருக்கிறார். அவரை அரசு வெளியே தள்ளவில்லை. ஆனால், மேலும் பெருங்குப்பைகள் போய் அங்கு ஒட்டிக்கொண்டு விட்டன. இதுதான் நிஜம்.

-நன்றி: உதயன் (19-02-2006)


# தென்னை

## கலைவளன் சி.சு நாகேந்திரன்

பனைமரத்தைக் குறித்த விபரங்கள் கிட்டத்தட்ட எல்லாமே தென்னை மரத்துக்கும் பொருந்தும். ஆனால் தென்னையின் ஓலை வித்தியாசமானது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். தென்னோலை சராசரி 18, 20 அடி நீளமாக இருக்கும். முற்றிக் கீழே கிடந்த தென்னோலையை எடுத்து, நீட்டுக்குப் பாதியாகப் பிளந்து ஒவ்வொரு பாதியிலும் இருக்கும் ஓலைகளைப் பின்னிக் கிடுகு இணக்குவார்கள். அநேகமாகப் பெண்களின் வேலைதான் இது. இந்தக் கிடுகுகளைச் சேர்த்து வைத்து வேலி அடைக்கவும், வீடு வேயவும், வேறு மறைப்புகள் செய்யவும் பாவிப்பார்கள். ஓலையிலிருந்து ஈர்க்குகளை வார்ந்து எடுத்து விளக்குமாறு செய்வார்கள். இதற்குக் கூட்டுமாறு என்றும் பெயர். இது வீடு வாசலைப் பெருக்க, தண்ணீர் விட்டுச் சுத்தம் செய்ய, உதவும். மிகவும் உறுதியானது. தென்னந்தும்பு பல வேலைகளுக்கு உதவும். கயிறாகத் திரிக்கவும், தும்புத்தடி செய்யவும், மெத்தைக்கு அடைக்கவும், காருக்கும் கதிரைக்கும்Cushion செய்வதற்கும், நெருப்பு மூட்டவும், இன்னும் பல தேவைகளைத் தும்பானது பூர்த்தி செய்யும். துலாவும், வீடு கட்டத் தேவையான மரங்களும் சீவியெடுத்துப் பாவிப்பதற்கு வைரமான தென்னை மரங்களையே பாவிப்பார்கள்.

திருவிழாக்கூட்டம் கோவில்களையும், மற்றும் சிறப்பான வைபவங்களின்போது மண்டபங்களையும் தோரணங்கள், மாவிலை கட்டி அலங்கரிப்பார்கள். அந்தத் தோரணங்கள் குருத்துத் தென்னோலையிலிருந்து செய்யப்படுவன. பனையைப் போலவே, தென்னம் பாளையிலிருந்துதான் கள்ளு சேர்த்து இறக்கிக் கொடுப்பார்கள். தென்னங்கள்ளும் குடித்தவுடன் வெறிக்கும். பனை, தென்னை, தறித்தால் அதன் மெதுமையான குருத்து சாப்பிடுவதற்கு ருசியாக இருக்கும். தறிக்கிறார்கள் என்றறிந்தவுடன் பிள்ளைகள் போட்டி போட்டுக் கொண்டு ஓடிப்போய்க் குருத்தை வெட்டிச் சாப்பிடுவார்கள்.

பனையில் நுங்கு காய்ப்பதுபோன்று தென்னையில் இளநீர் காய்க்கும். அதைப் பிடுங்கி மேல்பக்கத்தை அரிந்து எறிந்துவிட்டு இளநீரைப் பருகித் தாகசாந்தி செய்து கொள்ளுவார்கள். அதனுள் இருக்கும் வழுக்கலைத் தோண்டிச் சாப்பிட நல்ல ருசி. இளநீர் முற்றியதும் தேங்காயாகிப் பழுத்துக் கீழே விழும். தேங்காயை மூடிப் புறப்பக்கத்தில் தடிப்பான பொச்சுமட்டை இருக்கும். அதைக் கொடுவாள் கத்தி அல்லது அலவாங்கின் உதவியால் உரித்து எடுத்தால் உள்ளே பலமான தடித்த ஓடு பந்து வடிவமாக இருக்கும். அதனுள்ளே ஓட்டுடன் ஒட்டியபடி வெள்ளைத் தேங்காய். உருண்டைத் தேங்காய்க்குள்ளே இருக்கும் இனிக்கும் இளநீர். தேங்காயைத் துருவி, துருவிய பூவைக் கசக்கிப் பிழிந்தெடுத்த தேங்காய்ப்பாலைக் கறி முதலியவற்றுக்குச் சேர்ப்பார்கள். பூவைப்பிழியாமல், தேங்காய்ப் பூவாகவே, சாப்பாட்டுடன் துணை உணவாகவும் பாவிப்பார்கள். பனம் விதைக்குள் பூரான் இருப்பது போன்று, தேங்காயை (பொச்சுடன்) நட்டு வைத்துச் சில நாட்கள் கழித்துத் தோண்டி எடுத்து வெட்டிப் பார்த்தால் உள்ளே பூரான் நிறைந்திருக்கும். இதுவும் சாப்பிட நல்ல ருசி.



பனங்கள்ளு குடித்தால் வெறிப்பதுபோன்று தென்னையில் உற்பத்தியாகும் தென்னங்கள்ளும் வெறிக்கத்தான் செய்யும்.

கமுகு - பனை, தென்னை போன்றதே கமுகமரமும். நீண்டு வளர்ந்திருக்கும். வட்டுக்குள் பாக்கு காய்க்கும். பிஞ்சுப் பாக்கு, நாறல்பாக்கு, கொட்டைப்பாக்கு எனப் பலவகைப்படும். பிஞ்சுப்பாக்கு மெதுமையாகவிருக்கும். இதை ஊறவைத் தெடுத்தால் நாறல்பாக்கு, தாம்பூலத்துடன் பாவிப்பார்கள். முற்றியதும் கொட்டைப்பாக்கு. இதைச் சீவித்தான் வெற்றிலையுடன் பாவிப்பார்கள். முழுக்கொட்டைப் பாக்கு சுவாமிக்கு அர்ச்சனைக்கும், மங்கல காரியங்களுச் சேர்த்துக் கொள்ளவும் உபயோகப்படும்.

நன்றி : அந்தக் காலத்து யாழ்ப்பாணம்

## ஆன்மிக சுற்றுலா செல்பவர்கள் கவனிக்க வேண்டியவை

தமிழ் நாட்டில் உள்ள சிவ தலங்கள், முருகத் தலங்கள் எல்லாம் தை மாதம் தொடங்கி ஆனிமாதம் வரையில்தான் உற்சவ காலம். ஆகவே இந்தக் காலங்களில் ஆன்மிக பயணத்தை ஒழுங்கு செய்தால் பலன் உண்டு. தைப்பூசம் - பழனி, பங்குனி தேர் திருவிழா - திருச்செந்தூர் மற்றும் வைகாசி விசாகம், மதுரை சித்திரை திருவிழா இப்படி பலவும் நடைபெறும். ஆடிமாதம் தொடங்கி மார்கழி மாதம் வரை அம்மனுக்கு திருவிழா. இதை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

ஆன்மிக சுற்றுலா செல்பவர்கள் ஒரு வழி காட்டுநருடன் போனால் நேரமும் பணமும் மிச்சமாகும். முதன் முறை செல்பவர்கள் பல ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும். பல கோவில்கள் பகல் 12 மணிக்கு பூட்டி மாலை 5 மணிக்குத்தான் திறப்பார்கள். இந்த நேரத்தில் செல்பவர்கள் சுவாமியை தரிசிக்க முடியாமல் கோவிலை மட்டும் பார்த்துவிட்டு போவார்கள். ஆகவே இவற்றையெல்லாம் தெரிந்துகொண்டு செல்வது அவசியம்.



### திருச்செந்தூர்

மிகவும் பலன் உள்ள விரதம் கந்த ஷஷ்டி - திருச்செந்தூர் கந்த ஷஷ்டி விரதம் இருந்தால் முருகன் அருள் பூரணமாக கிடைக்கும் என்பார்கள். ஐப்பசி மாதம் தீபாவளிக்கு அடுத்த நாள் நடைபெறும் கந்த ஷஷ்டி விரத ஆறு நாட்களும் தங்கி வரலாம். பயனுள்ள ஒரு ஆன்மிக சுற்றுலா.

## முழுவதும் பயன்தரும் முருங்கை



இலை, பூ, காய் போன்ற அனைத்தையும் கூட்டு, குழம்புக்கு பயன்படுத்தும் விதத்தில் அபூர்வமானதாக இருப்பது முருங்கை மரம். இதில் இருக்கும் மருத்துவ சக்தியும், ஆரோக்கிய சக்தியும் மிக அதிகம். ஒரு அவுன்ஸ் முருங்கைச் சாறில் இருக்கும் சத்துக்கள் என்னென்ன தெரியுமா?

- ❖ நான்கு கப் பாலில் இருக்கும் அளவுக்கு கல்சியம் இருக்கிறது.
- ❖ ஏழு ஆரஞ்சுப் பழத்தில் அளவுக்கு விற்றமின்-சி இருக்கிறது.
- ❖ ஏழு நேத்திரன் பழத்தில் இருக்கும் அளவுக்கு பொட்டாசியம் உள்ளது.
- ❖ பெருமளவு இரும்புச் சத்தும் இருக்கிறது.

முருங்கைக்காயும் ஆரோக்கியமான காய்கறி வகையில் இடம் பெறுகிறது. உடலுக்குத் தேவையான எல்லாவிதமான சத்துக்களும் அதில் அடங்கியுள்ளன. கர்ப்பிணிகளுக்கும், தாய்ப் பாலூட்டும் தாய்மார்களுக்கும் மிகத் தேவையான சத்துக்கள் இதில் இருக்கின்றன. முருங்கையின் சிறப்பை ஆயுர்வேத மருத்துவம் மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. முருங்கையின் தோலும், வேரும் பல்வேறு விதமான ஆயுர்வேத மருந்துக்களில் சேர்கிறது. மருந்துகளின் பட்டியலைப் பார்த்தால் கிட்டத்தட்ட 300 நோய்களுக்கு முருங்கை பயன்படுத்தப்படுகிறது. முருங்கையின் எல்லாப் பாகங்களுமே மருந்தாகப் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

முருங்கைக்கு இலங்கையில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் நல்ல வரவேற்பு. வெளிநாடுகளில் முருங்கை இலையை காயவைத்து பொடி செய்து, போத்தல்களில் அடைத்து விற்கிறார்கள். அதனை சத்திற்காகவும், இறைச்சி வகைகளில் சுவையூட்டிகளாகவும் பயன்படுத்துகிறார்கள். முருங்கைக்காயில் இருந்து எடுக்கும் விதைகளில் இருந்து எண்ணெய் தயாரிக்கிறார்கள். இதனை சாலட்டுகளில் பயன்படுத்துகிறார்கள். இந்த எண்ணெயில் மாமிச சத்து அதிகமாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முருங்கைப் பூவில் தேங்காய் சேர்த்து கூட்டு வைப்பது தென்னிந்தியாவில் பிரசித்தம்.



உ.வே.சா. – கிருபானந்த வாரியார் – உமாமகேசுவரனார் – தேவனேயப் பாவாணர் நினைவு அஞ்சல் தலை வெளியீட்டு விழாவில் தலைவர் கலைஞர் அவர்களின் உரை

தமிழ் ஆர்வமும் உணர்வும் கொண்டவர் கிருபானந்த வாரியார்.

திருவாரூர் நிகழ்ச்சியை முழுமையாக வீரமணி அவர்கள் கூறவில்லை. ஒரு ஆலயத்தில் நடந்த நிகழ்ச்சி. அடிக்கடி ஆலயத்திற்கு சொற்பொழிவுக்காக வாரியார் வருவார். நாங்கள் எல்லாம் அப்போது பள்ளி மாணவர்கள். அவர் வந்தால் பக்தர்கள் போகிறார்களே இல்லையோ நாங்கள், அந்த நிகழ்ச்சிகளுக்குச் செல்வது வழக்கம். குறுக்குக் கேள்விகளை கேட்பது வழக்கம். ஜீவகாருண்யத்தைப் பற்றி அப்பர் திருநாளில் பேசும்போது மிருகங்களுக்காக ஆண்டவன் இன்னொரு மிருகத்தைச் சாப்பிடுவதற்காகப் படைக்கவில்லை. ஒரு உயிரைத் தின்று பிழைப்பதற்காக இன்னொரு உயிரைப் படைக்கவில்லை என்றார். நான் அப்போது எழுந்து, சிங்கத்திற்காக, புலிக்காக ஆண்டவன் எந்த உணவைப் படைத்தான் என்று கேட்டேன். ஏனென்றால் சிங்கமோ, புலியோ ஆடுமாடுகளை, மான்களைத்தான் வேட்டையாடி சாப்பிட முடியும். இதெல்லாம் குறும்புத் தனமான கேள்வி என்று வாரியார் அதனை ஒதுக்கிவிட்டார். நாங்களும் அமைதியாகிவிட்டோம்.

காரணம் அந்த நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தவர் அந்த ஊர் நீதிக் கட்சி தலைவர். நாங்கள் எல்லாம் அவருக்குப் பயப்படுகின்ற மாணவர்கள். அவர் எங்களைப் பார்த்து கையைக் காட்டியதும், அவருக்கு மரியாதை காட்டுவதற்காக அமர்ந்து விட்டோம். மீண்டும் அவர் தொடர்ந்து பேசும் போது, இந்தப் பிள்ளைகள் இன்னும் கூட கேட்பார்கள். மரத்திற்கு உயிர் கிடையாதா, அந்த மரத்திலே காய்கறிகளைப் பறித்தால், அந்த மரம் கோபித்துக் கொள்ளாதா? என்று கூட குறும்புத்தனமாக கேட்பார்கள். அதனால் நான் கூறுகிறேன், முருங்கைக் காயைப் பறித்தால் மரம் சாவதில்லை, மாங்காயைப் பறித்தால் மாமரம் சாவதில்லை. அதனால் அவைகளை எல்லாம் சாப்பிடலாம் என்றார்.

நான் உடனே, சாம்பார் வைக்க கீரைத் தண்டை அடியோடு பிடுங்கி விடுகிறார்களே, அப்போது அதன் உயிர் போய்விடுகிறதுதானே? என்று கேட்டேன். இதை என்னுடைய ஆற்றலை வெளிப்படுத்துவதற்காகச் சொல்லவில்லை, இப்படியெல்லாம் கேட்டும் அவர் அமைதியாக இருந்தாரே என்பதற்காக அவருடைய அடக்கத்தை காட்டுவதற்காகச் சொல்கிறேனே அல்லாமல் வேறில்லை.

இப்படி கேள்வி கேட்கப்பட்ட, அந்த கால கட்டம் அவரே கூட தந்தை பெரியார் அவர்களை கொள்கை ரீதியாகத் தாக்கி பேசிய அந்த காலக் கட்டம். அப்போது அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு இதழில் வாரியாரைத் தாக்கி எழுதிய கால கட்டம். அந்த நேரத்தில் ஒரு நிகழ்ச்சியை சொல்ல விரும்புகிறேன். வாரியாரிடமிருந்து அண்ணா அவர்களுக்கு ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தை அண்ணா படித்துவிட்டு மனம் உருகினார். அந்தக் கடிதத்தை யார் படித்தாலும் மனம் உருகும். அந்தக் கடிதத்தில் என்ன எழுதினார் தெரியுமா? நான் ஒரு தமிழன், இது போன்ற கதாகாலட்சேபங்களை நடத்திக்கொண்டிருக்கிறேன். நான் ஒரு தமிழன்தான் நடத்திக் கொண்டிருக்கிறேன். அதற்கும் எதிர்ப்பா? யோசித்துப் பாருங்கள் என்று எழுதியிருந்தார். அண்ணா அவர்கள் அதைப் படித்துவிட்டு, இனிமேல் அப்படிப்பட்ட கட்டுரைகளை திராவிட நாடு இதழிலே வெளியிட வேண்டாமென்று சொல்லிவிட்டார். அந்தத் தமிழன் என்ற உணர்வை, அவர்கள் அவ்வளவு லாவகமாக அன்றைக்கு வெளிப்படுத்தினார் என்பதற்காகத் தான் இதைச் சொல்கிறேனே அல்லாமல் வேறில்லை.

பல அறச் செயல்களை அவர் செய்திருக்கிறார். அவருடைய ஆன்மீக வழியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கோவில்களுக்கு திருப்பணி செய்து, குட முழுக்கு நடத்தியிருக்கிறார். அவருக்கென தரப்படுகின்ற எந்த ஊதியமானாலும் அதை உடனடியாக அறக் காரியங்களுக்காகவே செலவிட்டார் என்று அவருடைய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு கூறுகிறது. அப்படிப்பட்ட ஒரு நல்ல எண்ணமும் பண்பாடும், நாகரீகமும், இவற்றுக்கெல்லாம் மேலாக தமிழ் ஆர்வமும், தமிழ் உணர்வும், தமிழ் திறனும் கொண்டவராக வாரியார் விளங்கினார். அவருடைய பெயரால் இன்று அஞ்சல் தலை வெளியிடப்பட்டிருப்பது மிக மிக பொருத்தமாக அமைந்திருக்கிறது.

*உரையை கேட்டு எமக்கு தந்தவர் கணேசமூர்த்தி அவர்கள்.*

## *The President's Telephone Call*

**Telephone call made by the president pf the Democratic Socialist Republic of Sri Lanka, Mahinda Rajapakse to the Editor-in-Chief, The Sunday Leader, Lasantha Wickrematunge on January 11,2006 at 11.13a.m.**

**( English Translation )**

Mahinda: **What have you written about Shiranthi in the Leader?**

Lasantha: **What has been written?**

Mahinda: **You should know what has been written**

Lasantha: **Did you read it? What are you talking about?**

Mahinda: **About what? F. your mother ( am.. Hu..a), son of bloody wh. (k.ri ve.e putha) I will finish you. You have hit me, now you are hitting my woman as well.**

Lasantha: **What has the article said?**

Mahinda: **I treated you well all this while. Now I will destroy you. You don't know who Mahinda Rajapakse is. You watch what I will do to you. You hit me even during the election. Paraiah. You are hitting even now.... I will destroy you.**

Lasantha: **Just because you are president, do not talk in that threatening way. We don't get intimidated by threats. Tell us what it is we are supposed to have written.**

Mahinda: **Pariah. You are not scared!... I will show you what it is to de scared. I will rest only when I destroy you. You wait and see. You don't know who Mahinda Rajapakse is.**

**(Courtesy: Sunday Leader & Tamilweek.com)**

### திருச்செந்தூர்

மிகவும் பலன் உள்ள விரதம் கந்த ஷஷ்டி - திருச்செந்தூரில் கந்த ஷஷ்டி விரதம் இருந்தால் முருகன் அருள் பூரணமாக கிடைக்கும் என்பார்கள். ஐப்பசி மாதம் தீபாவளிக்கு அடுத்த நாள் நடைபெறும் கந்த ஷஷ்டி விரத ஆறு நாட்களும் தங்கி வரலாம். பயனுள்ள ஒரு ஆன்மிக சுற்றுலா.

1. இசைத்தட்டுகளை ஒலிபரப்பும் கிராமப் போனைக் கண்டுபிடித்தவர் எடிசன். ஒருமுறை பெண்மணி ஒருத்தி எடிசனைச் சந்தித்தார். "பேசுகிற கருவியைக் கண்டுபிடித்த நீங்கள் கடவுளுக்குச் சமம்" என்று அவரிடம் அவள் கூறினாள். "கடவுளைவிட ஒருபடி உயர்ந்தவன் நான்" என்று எடிசன் சொன்னார். எப்படி என்று அந்தப் பெண் கேட்டாள். எடிசன் இப்படிப் பதில் சொன்னார்; "கடவுள் பெண்களைப் படைத்தார். கடவுளே நினைத்தால் கூட பெண்கள் பேசுவதை நிறுத்த முடியாது. ஆனால் நான் கண்டுபிடித்த கருவியால் அவர்கள் பேசுவதை நிறுத்த முடியும்" என்றார் அவர்.

2. மற்றவர்கள் மகிழ்ச்சியாக இருக்கும் போது நானும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். மற்றவர்கள் வருந்தும் போது நானும் வருந்துகிறேன். இதுதான் என் மதம்.

-ஆபிரகாம் லிங்கன்.

## சாதனைப் பறவை


பறந்து செல்வது என்பது பறவைகளின் இயற்கை குணம்தான். தினந்தோறும் பல கிலோ மீற்றர் தூரம் சில பறவைகள் பறந்து சென்று தங்களுக்குக்கான உணவுகளை பெறுகின்றன. ஆனால் இவைகளை எல்லாம் பொதுவாக கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை.

அதேபோல் சில வெளிநாட்டுப் பறவைகள் சில குறிப்பிட்ட காலங்களில் வேடந்தாங்கல் போன்ற சரணாலயங்களுக்கு வந்து முட்டையிட்டு குஞ்சு பொரித்துச் செல்கின்றன. இவைகள் பறந்து சென்ற தூரத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

ஸ்டொ்னா கிரோண்டா என்ற பறவையின் பறக்கும் சாதனை உலக கின்னஸில் இடம் பிடித்திருக்கிறது. மத்திய பின்லாந்து நாட்டைச் சேர்ந்த இந்தப் பறவை 1996 ஆம் ஆண்டு 30ஆம் திகதி பிடிக்கப்பட்டது. பின்னர் அதற்கு காலில் அடையாளம் பொறிக்கப்பட்டது. அதே பறவை 1997ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இறுதியில் அவுஸ்திரேலியாவின் ரோட்டாமா தீவில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த இரண்டு நாடுகளுக்கும் இடைப்பட்ட தூரமான 26 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தை அந்த குறிப்பிட்ட காலங்களில் கடந்து சாதனை படைத்திருக்கிறது. உலகில் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் அதிக தூரம் கடந்த பறவை என்ற பெருமையை ஸ்டொ்னா கிரோண்டா பெற்றிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

லொம்பிற்கில் தமிழ் மக்களுக்கேற்ற **Shopping Centre**












# பங்குனி மாதப்பலன் (மார்ச் 15 - ஏப்ரல் 15)

– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாகரன்
37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465 செல் : 94441 17 1115

**மேடம்** கடின உழைப்பாளிகளே ! செலவினங்களும், அலைச்சலும் அதிகமாகும். உங்களைப் பற்றிய வதந்திகளை சிலர் பரப்புவார்கள். எதிர்பாராத வகையில் பணம் வரும். உறவினர்கள், உடன் பிறந்தவர்களிடம் நிதானம் தேவை. கணவன் மனைவி உறவு சுமார்தான். வியாபாரத்தில் போட்டிகள் கடுமையாகும். உத்யோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. பிற்பகுதி இனிக்கும் மாதமிது.

**இடபம்** இயல்பாகப் பழகுபவர்களே ! பணப்புழக்கம் அதிகரிக்கும். கணவன், மனைவிக்குள் நெருக்கம் கூடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி பொங்கும். ஆடை, ஆபரணம் சேரும். புது வீடு, வாகனம் வாங்குவீர்கள். பழைய கடன் தீரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் தேடி வரும். உத்யோகத்தில் சலுகைகள் கிடைக்கும். அதிரடி முன்னேற்றம் தரும் மாதமிது;

**மிதுனம்** விகடகவிகளே ! அதிரடித் திட்டங்கள் தீட்டுவீர்கள். உங்களின் நீண்ட கால ஆசைகள் யாவும் நிறைவேறும். எதிரிகள் அடங்குவார்கள். குடும்பத்தில் அமைதி தங்கும். குழந்தை பாக்யம் உண்டாகும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் ஈட்டுவீர்கள். உத்யோகத்தில் சம்பளம் உயர்வதுடன் சலுகைகளும் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். அதிர்ஷ்ட தேவதை அணுகி வரும் மாதமிது.

**கடகம்** சமயோஜித புத்தி உள்ளவர்களே ! சலிப்பும் தாழ்வு மனப்பான்மையும் நீங்கும். தன்னம்பிக்கை பெருகும். தடைப்பட்ட காரியங்கள் உடனே முடியும். கணவன் மனைவிக்குள் நெருக்கம் அதிகமாகும். தண்டச் செலவுகள் குறையும். வியாபாரத்தில் லாபம் எதிர்பார்த்தபடி அமையும். உத்யோகத்தில் உங்கள் கை ஓங்கும். பிள்ளைகளுக்கு சுப காரியம் நடக்கும். தடைகள் உடைபடும் மாதமிது.

**சிம்மம்** மனசாட்சி உள்ளவர்களே ! தள்ளிப்போன வாய்ப்புகள் தேடி வரும். தொண்டை வலி, கழுத்து வலி நீங்கும். அலைச்சல் குறையும். கோபம் தணியும். வீட்டில் சுப காரியம் நடக்கும். வியாபாரத்தை விரிவு படுத்துவீர்கள். சில சில வாகன விபத்துக்கள் வந்து போகும். உத்யோகத்தில் வேலைப் பளுக் கூடும். வதந்திகளை நம்ப வேண்டாம். பிற்பகுதி இனிக்கும் மாதமிது.

**கன்னி** கண்ணியம் தவறாதவர்களே! குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துப் போவது நல்லது. சின்னச் சின்ன வாக்குவாதங்கள் வந்து போகும். நண்பர்கள், உறவினர் வகையில் செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் நிதானம் தேவை. உத்யோகத்தில் அதிகாரிகளை அனுசரித்துப் போவது நல்லது. ஆடை, ஆபரணம் சேரும். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய மாதமிது.

**துலாம்** துணிச்சலானவர்களே ! பொறுத்தது போதும் என பொங்கி எழுவீர்கள். பணவரவு அதிகரிக்கும். செலவுகள் குறையும். வழக்கில் வெற்றி கிடைக்கும். மனைவியின் உடல்நலம் தேறும். வியாபாரத்தில் அதிரடி முடிவு எடுப்பீர்கள். உத்யோகத்தில் வீண் குழப்பங்கள் விலகும். லாட்டரி மூலம் பணம் வரும். திடீர் திருப்பங்கள் நிறைந்த மாதமிது.

**விருச்சிகம்** விவேகமானவர்களே ! சொன்ன சொல்லை நிறைவேற்றுவீர்கள். வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். பிள்ளைகள் உங்களின் அறிவுரைகளை ஏற்பார்கள். வியாபாரத்தில் புது முதலீடுகள் செய்வீர்கள். ஆடை, ஆபரணம் சேரும். உத்யோகத்தில் கெடுபிடிகள் குறையும். பழைய கடன் தீரும். சொத்து வாங்குவீர்கள். எதிலும் வெற்றி பெறும் மாதமிது.

**தனுசு** தடைகண்டு அஞ்சாதவர்களே ! உங்களின் நீண்ட கால திட்டமொன்று இப்போது நிறைவேறும். உறவினர்கள் மதிப்பார்கள். வி.ஐ.பிகள் உதவுவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்யோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். சாதிக்கும் மாதமிது.


**மகரம்** மண்ணின் மைந்தர்களே ! பேச்சில் அனுபவமறிவு வெளிப்படும். அழகு, இளமை தங்கும். சொத்துப் பிரச்சினை தீரும். வியாபாரத்தை விரிவு படுத்துவீர்கள். உத்யோகத்தில் நல்ல புது வாய்ப்புகள் தேடி வரும்.பிள்ளைகளின் ஆரோக்யம் திருப்தி தரும். கல்யாணப் பேச்சு வார்த்தைகள் வெற்றியில் முடியும். வி.ஐ.பிகளால் பாராட்டப்படுவீர்கள். புதுத் திட்டங்கள் தீட்டும் மாதமிது.

**கும்பம்** ஒற்றுமையுணர்வு உள்ளவர்களே ! நோய், அலட்சியம், மறதி நீங்கும். சுறுசுறுப்பாவீர்கள். கண்வலி, பல்வலியும் நீங்கும். பணம் வரும். விலையுயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். வியாபாரத்தில் நட்டம் நீங்கும். நல்ல வேலையாட்கள் கிடைப்பார்கள். உத்யோகத்தில் அதிகாரிகளின் அன்பை பெறுவீர்கள். வாகனம், வீடு, புதிதாக வந்து சேரும். எண்ணங்கள் ஈடேறும் மாதமிது.

**மீனம்** மனிதாபிமானிகளே ! வெள்ளி வலுவாக இருப்பதால் பணம் பல வழியிலும் வரும். குடும்பத்தில் இனிய சம்பவங்கள் நிகழும். உஷ்ண சம்பந்தப்பட்ட உடல் நலக் குறைவுகள் வந்து போகும். வியாபாரத்தில் தேங்கிக் கிடந்த சரக்குகள் விற்றுத் தீரும். உத்யோகத்தில் சம்பளம் உயரும். நல்ல வாய்ப்புகளும் தேடி வரும். சகோதரர் உதவுவார். மதிப்பு, மரியாதை உயரும் மாதமிது.



தமிழினத்தின்
பூர்வீக சரித்திரம்
என்னும் நூலை 5.03.2006 ஞாயிற்றுக் கிழமை
வெளியிட்டிருக்கிறார்கள்.
இந்நூலின் ஆசிரியர் தமிழர் சுயாட்சி கழகத்தின் தலைவரும்
முந்நாள் தீவகத்தின் நாடாளுமன்ற உறுப்பினரும்,
தமிழரசு கட்சியின் மூளை என்று வர்ணிக்கப்படுவருமாகிய
வ.நவரத்தினம்
அவர்களின் படைப்பாகும்.
இப்புத்தகம் லண்டனிலும் வெளியிடப்படுவதற்கு ஏற்பாடு
செய்யப்படுவதாக அறிகிறோம்.

Mierra Jewellery Mart
Gems & Jewellery
34 London Road Tooting London SW 17 9SP
Tel : 208 648 7750 www.meera_jewellery.com
பழைய தங்கத்தில் புத்தம் புதிய நகைகள் செய்து கொள்ள,
அதிர்ஷ்ட நவரத்தின கற்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ள,
உங்களுக்குத் தேவையான 22ct சிங்கப்பூர் நகைகளை
நியாய விலையில் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள




Link AIR
Travels Limited
ATOL PROTECTED
IATA
SriLankan
Special Fares to : Colombo, Madras, Singapore, Canada
We can also arrange : COLOMBO - JAFFNA - COLOMBO
361 London Road, Croydon, Surrey CR0 3PB
Tel : 020 8665 0206 Fax : 020 8669 8579

## ஆறுமுகம் - லட்சுமி தம்பதியினர்


### ஆயிரம் பிறை கண்ட ஆறுமுகம் ஐயா

இந்தக் குடும்பம் யாழ்ப்பாணம் கரம்பனை விட்டு வெளியேறி வெளிநாட்டுக்குப் போக வந்தவர்கள். அமெரிக்கா கலிபோர்னியாவில் மகள், கனடாவில் மகன், இலண்டனில் மகன், ஆஸ்டிரேலியாவில் அக்கா, இலண்டனின் தங்கை இப்படி இவர்களின் உறவுகள் உலகம் முழுக்கவும் செறிந்திருக்க இவர்களுக்கு மட்டும் தமிழ்நாடு பிடித்துவிட்டது. கடந்த 16 வருடமாக அண்ணா நகரில் வாழும் இவர்களை நான் ஒவ்வொரு வருடமும் சந்திக்கிறேன். அவர்களின் ஆன்மிக வாழ்க்கை அவர்களை ஆனந்தமாக வைத்துள்ளது. கடந்த மாதம் ஐயா அவர்களுக்கு கடுமையான நெஞ்சுவலி. அப்பல்லோ மருத்துவமனையில் ஆவி பிரியும் நிலை. எல்லா பிள்ளைகளும் வந்து சுற்றி வர நின்றார்கள். அதிசயம் அவர் இப்பொழுது வீட்டில் இருக்கிறார். இதை நான் ஒரு அற்புதமாகவே கருதுகிறேன். 87 வயது கண்ட ஐயா மருத்துவமனையில் அறிவு இல்லாத நிலையில் டேய் முருகா நான் இப்ப வர மாட்டேன் என்னை விட்டுட்டு போ என்று சொன்னதை நான் என் காதால் கேட்டேன். இப்படியான சில அற்புதங்களும் இப்போது நிகழ்கின்றன. இவர் மனைவி கடந்த 70 வருடமாக அவவுடைய அறிவு வந்த காலத்திலிருந்து இன்று வரை சிவராத்திரி விரதம் முறையாக அனுஷ்டிப்பவர். சிவராத்திரி விரதத்தை எங்களுக்கு கற்றுத் தந்தவவும் அவவே. இவர்களது மகிழ்ச்சியான வாழ்க்கை எல்லோருக்கும் ஒரு பாடம்.

பதிப்பாசிரியர்
சிவானந்த சோதி



# திருமணத் தகவல்



யாழ்ப்பாணம் ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த லண்டனில் வதியும் மணமகனுக்கு அவரின் பெற்றோர்கள் தகுந்த வரனைத் தேடுகிறார்கள்.
விபரம் அறிய தமிழர் தகவலை தொடர்பு கொள்ளவும்.

ஈழத்தைச் சேர்ந்த தமிழ்நாட்டில் பணிபுரியும் MBBS படித்த பெண் டாக்டர் வயது 26. ரோகிணி நட்சத்திரம். அவருடைய அப்பா தகுந்த வரனைத் தேடுகிறார்
தொடர்பு : தமிழ்நாடு
91 44 2654 0600

இந்தப் பக்கத்தில் உங்கள் திருமணத் தகவல் வெளியிட வேண்டுமாயின் தமிழர் தகவலைத் தொடர்பு கொள்ளுங்கள். முற்றிலும் இலவச சேவை

உ

ஸ்ரீ சித்ஸபேசாய மங்களம்



தேதி - 6-2-2006

உயர்திரு மஹா-ள-ள-ஸ்ரீ ......சிவானந்த ஜோதி...... அவர்களுக்கு

இப்பவும் பூலோக கைலாயம், சிதாகாசம், புலியூர், தில்வாரண்யம், தில்லைப்பெருங்கோயில் என்று பல்வேறு பெயர்களால் பெருமையுடன் போற்றிவரப்படுகின்ற பல்வேறு வரலாற்று சிறப்புகளை உடையதும், சைவர்களின் அகராதியில் "கோயில்" என்றால் சிதம்பரம் என்று கூறப்படுவதுமான சிதம்பரம் க்ஷேத்திரத்தில் - உலகத்தில் உள்ள அனைத்துதரப்பட்ட மக்களுக்கும் புன்சிரிப்புடன் அருள்பாலித்து வருபவர் ஸ்ரீ சிவகாமசுந்தரிஸமேத ஸ்ரீமந் ஆனந்த நடராஜமூர்த்தியாவார்.

எனவே அப்பேற்பட்ட மஹோன்னதமான ஸ்ரீ சிவகாமசுந்தரி ஸமேத ஸ்ரீமந் ஆனந்த நடராஜராஜ மூர்த்திக்கு சித்ஸபா ஸம்ப்ரோக்ஷண மஹா கும்பாபிஷேகம் செய்வதற்கு 16.11.2003 தேதியில் நடைபெற்ற எங்கள் பொது மீட்டிங்கியில் த.மா.தியாகப்பா தீக்ஷிதர் குடும்பத்தாருக்கு உத்தரவு அளித்துள்ளார்கள். 11.02.1987க்கு பிறகு இப்பவும் வரும் விய வருஷம் நாள் பார்ப்பதற்கு உண்டான ஆயத்தங்களை செய்து வருகிறோம். இது தொடர்பான பல்வேறு திருப்பணிகள் செய்யவேண்டியுள்ளது. இந்த வைபவங்களில் மெய்யன்பர்கள் எல்லோரும் பங்கு பெற வேணும் என ஆசைப்படுகிறோம். ஆதலால் தாங்களும் தங்களைச்சார்ந்தவர்களும் மேற்படி சித்ஸபா ஸம்ப்ரோக்ஷண மஹா கும்பாபிஷேக வைபவங்களுக்கு பெரும் பங்கு கொண்டு தில்லைக்கூத்தனின் திருவருளைப்பெற வேணுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

த.மா. தியாகப்பா தீக்ஷிதர் (கையொப்பம்)

**த.மா. தியாகப்பா தீக்ஷிதர்**

அன்புள்ள சைவ வாசகர்களுக்கு

# சிதம்பரம் தில்லை நடராஜர் கோயில் புனர்நிர்மாணமும் கும்பாபிஷேகமும்

இவ்விஷயம் பற்றி தமிழர் தகவலில் சிவயோக அறக்கட்டளை சார்பாக ஜூன் 2004 இதழில் ஒரு விளம்பரம் வெளியிடப்பட்டு அந்த விளம்பரத்துக்கு ஏற்ற மாதிரி கும்பாபிஷேகம் நடைபெறாது என்று ஆகஸ்ட் மாதம் ஒரு அறிவிப்பும் வெளியிட்டிருந்தோம்.

தமிழ் நாட்டில் உள்ள கோயில்களில் இருந்து சிதம்பரம் ஒரு வித்யாசமான நிர்வாகத்தில் உள்ளது பலருக்கு தெரிந்திருக்கலாம். அங்கு வாழும் 350 தீட்சிதர்களின் நிர்வாகத்தில்தான் இந்தக் கோயில் இதுவரை நடந்து வருகிறது. இந்த கோயிலின் கும்பாபிஷேகத்தை இந்த கோயிலின் தீட்சிதர்களால் மட்டுமே நடத்தி கொடுக்க முடியும். இதன் காரணமாக மேல்காணும் கடிதம் தமிழர் தகவல் பதிப்பாசிரியருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரதியை இத்துடன் பிரசுரிக்கிறோம்.

இந்த கும்பாபிஷேகத்துக்கு இலண்டன் வாழ் சைவ மக்களின் உதவியை அவர்கள் நாடி இருப்பதாலும் சிதம்பரத்துக்கும் ஈழத் தமிழர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாலும் பல நூறு ஏக்கர் காணிகள் சிதம்பரம் கோயிலுக்கு இருப்பதாலும் தமிழர் தகவல் இது விஷயத்தில் கூடிய அக்கறை செலுத்தி மூன்று சிறந்த ஆன்மிகவாதிகளின் அனுசரனையோடு அவர்களுக்குரிய தேவைகளில் ஏதாவது ஒன்றை நாங்கள் செய்துகொடுக்க திருவுளம் கூட்டியுள்ளது. உங்களின் ஆதரவை நாடுகிறோம்.

( குறிப்பு : இந்த கோயிலின் மூன்று கோபுரங்களுக்கான கும்பாபிஷேகம் 17.03.1006இல் நடைபெறுகிறது )

தொடர்புகளுக்கு

**தமிழர் தகவல்**

## WEST CROYDON-ல்

# Best Food

*259 - 261, London Road*
*West Croydon Surrey*
*CRO 2RL*
*Tel : 020 8684 6269*
*Fax : 020 8686 4577*



மலிந்த விலையில்
மிகுந்த பொருட்கள்

## HARROW-வில்

# Best Food

249 Northolt Road Harrow
Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933

**சுகி சிவம்** அவர்களின்
அனைத்துப் புத்தகங்களும்
பெற்றுக்கொள்ளலாம்
**ரமணி சந்திரனின்** புத்தகங்கள் யாவும்
**2** பவுண் மட்டுமே







தசாப்த விழாக்கண்ட ' சுயதெரிவுமுறை ' முன்னோடி, திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனிடம் மணமகள்மாரின் கடிதக்கோப்புக்கள் எக்கச்சக்கம்!!!

மணமகள்மாரின் கடிதக்கோப்புக்கள் நாடு, வயது ரீதியாக வகுக்கப்பட்டு - விவரங்கள், சாதகக் குறிப்புக்கள், போட்டோ அல்பங்கள், பொருத்த அட்டவணைகள் இணைக்கப்பட்டு- கொடிப்பொழுதில் விருப்பத்திற்கு உரியனவா? பொருந்தக் கூடியனவா? என்பனவற்றை அறியக்கூடிய விதத்தில் பேணப்படுகின்றன.

**திருமண சேவை**

மேலதிக விவரங்களுக்கு இன்றே வேல அமுதனுடன் தொடர்புகொள்க!
சந்திப்பு முக்கியம்! ஆனால், முன்னேற்பாட்டு
ஒழுங்குமுறையில் மாத்திரம்!

விசாரித்து விவரமறிய
திங்கள், புதன், வெள்ளி நாட்களில்
இலங்கை நேரம் மாலை மணி 4.30-8.00 வரையான நேரகாலத்துள்
வேல் அமுதனுடன் நேரடித் தொலைபேசியில் தொடர்பு கொள்க!
தொலைபேசி : 94112360488, 94114514396



முகவரி
' Self Selection System ' Forerunner
Marriage Facilator
Kurumpasidiyoor Mayelu Vel Amudhan
8 / 3 / 3, Metro Apt
[ Opposite Wellawatte Police, Via 33rd Lane ]
55th Lane Colombo - 06 Sril Lanka

**ரமணி சந்திரனின்**
புத்தகங்கள் யாவும்
**2** பவுண் மட்டுமே






## HOUNSLOW-வில்

# Best Food

364 - 366, Bath Road
Hounslow Middlesex TW4 7KT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருக்கயிலாயம்
# மானஸரோவர் – நேப்பாள்

திருப்பயணம் 17 நாட்கள் (மாதந்தோறும்)

**புறப்படும் நாள் : மே – செப்டம்பர்　　　கட்டணம் £ 1350**



## திருப்பயணத் திட்டம்

| | |
|---|---|
| 1ம் நாள் | திருவருள் துணையுடன் லண்டனிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு காட்மாண்டு அடைந்து தங்குதல். |
| 2ம் நாள் | காட்மாண்டுவில் பசுபதிநாதரை தரிசனம் செய்து தங்குதல். |
| 3ம் நாள் | காட்மாண்டுவிலிருந்து ஜீப்பில் நியாலம் சென்று தங்குதல். |
| 4ம் நாள் | நியாலம் தங்குதல். (மலையேறி பயிற்சி செய்தல்). |
| 5ம் நாள் | நியாலத்திலிருந்து ஜீப்பில் சாகா சென்று தங்குதல். |
| 6ம் நாள் | சாகாவிலிருந்து ஜீப்பில் பர்யாங்க் சென்று தங்குதல். |
| 7ம் நாள் | பர்யாங்கிலிருந்து ஜீப்பில் மானஸரோவர் வலம் வந்து சூ கேம்பில் (திருக்கயிலாயம் முதல் தரிசனம்). |
| 8ம் நாள் | மானஸரோவரில் நீராடி, தீர்த்தம், மூர்த்தம் எடுத்து வேள்வி செய்து தார்ச்சனில் தங்குதல். |
| 9ம் நாள் | தார்ச்சனிலிருந்து திருக்கயிலாயம் அஷ்டபத் சென்று தெற்குமுக தரிசனம் செய்து தார்ச்சன் கேம்பில் தங்குதல். |
| 10ம் நாள் | திருக்கயிலாய பரிக்கிராமா (வலம் வருதல்) ஆரம்பம். தார்ச்சனிலிருந்து தொரல்புக் (வடக்குமுகம்) தங்குதல். |
| 11ம் நாள் | தொரல்புக் கேம்பிலிருந்து ஜீதுல்புக் கேம்ப் தங்குதல் |
| 12ம் நாள் | ஜீதுல்புக்கிலிருந்து பர்யாங் சென்று தங்குதல் |
| 13ம் நாள் | பர்யாங்கிலிருந்து சாகா சென்று தங்குதல் (ஜீப்) |
| 14ம் நாள் | சாகாவிலிருந்து நியாலம் சென்று தங்குதல் (ஜீப்) |
| 15ம் நாள் | நியாலத்திலிருந்து காட்மாண்டு சென்று தங்குதல் (ஜீப்) |
| 16ம் நாள் | காட்மாண்டுவில் ஓய்வு |
| 17ம் நாள் | திருவருள் துணையுடன் விமானம் மூலம் இலண்டன் அடைதல். |

எங்கள் கைலாய யாத்திரை பற்றிய விபரங்களை தெரிந்து கொள்ள இரண்டாம் பக்கம் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்

(கட்டணம், பயணத்திட்டம் மாறுதலுக்குட்பட்டது)

திருக்கயிலாய பயணத்தின் போது ஹெலிகாப்டரில் பூலோக வைகுந்தம் முக்திநாத் சென்று வர ஏற்பாடு செய்து தரப்படும். ( தனிக்கட்டணம்)

# பெரியாரைத் துணைக்கோடல் !

## பண்பிடைத் தோய்ந்த பாரதிதாசனார்:

தமிழ் உலகத்தின் 'பாவேந்தர்' என்பவர் கனக - சுப்புரத்தினம் என்னும் பாரதிதாசன்தான். புதுவையில் பிறந்தவர். 1981 ஏப்ரல் 29தான் அந்த நன்னாள். அப்பா கனகசபை அம்மா இலக்குமி. நான்கு பேர் கொண்ட குடும்பத்தில் இவர் மூன்றாமவர். மனவுறுதியும் வாதிக்கும் தன்மையும் சிறுவயதிலேயே அவரது சிந்தனையுள் ஆட்கொண்டவை. நிமிர்ந்து நடப்பார். நெருப்பாய் கொதிப்பார். சிறுமை கண்டால் சீறி எழுவார். அது ஒரு 'தமிழ்த்திமிர்' என்றுதான் எண்ணப்படுகிறது. 37 ஆண்டுகள் தான் விரும்பியபடியே தமிழ் மணக்கும் ஆசிரியத் தொழிலில் தரித்து நின்றவர். நெடியலும் உயரியதுமான அவர் தமிழ்ப் பணிக்கும் நாட்டுப் பணிக்கும் ஈடில்லை. பெரியாரைத் துணைக்கொண்ட பேரறிவாளனாக அவர் வாழ்ந்திருக்கிறார். அவரது உவமைகள், சந்தப் பாங்கு, உணர்த்தல்கள் என்பன உயரிய நோக்கானவை - தமிழர்க்கு விருந்தானவை.

சித்தர்கள், குமரகுருபரர் போன்றவர்களின் வடிவச் சாயலைக் கூட அவரிடம் ஆய்வாளர்கள் கண்டிருக்கிறார்கள். பதினெட்டு வயதில் தமிழாசிரியராகப் பணியேற்ற போதே வயது பற்றிய சர்ச்சை எழுந்தது. தைரியமாக அதை எதிர் கொண்டார். 1980இல் அவர் விரும்பிய தமிழாசிரியர் பதவியும், மகாகவி பாரதியாரின் அறிமுகமும் கிடைக்கிறது. "எங்கெங்கு காணினும் சக்தியடா..." எனத் தொடங்கும் பாடலுடன், பாரதியின் கவிதா மண்டலத்துள் கனக - சுப்புரத்தினம் 'பாரதிதாசன்' ஆகிறார். அதன் பின் அவரது பாடல்கள் தூண்டலும், துலங்கலுமாக வெளிப்படுகின்றன.

பாரதியின் அந்தரங்கச் செயலர் போல் பத்து ஆண்டுகள் ஒன்றிணைந்திருந்த காலத்தில்தான் பல தேசியத் தலைவர்களின் தொடர்பு ஏற்படுகிறது. அதில் முதன்மையானவர் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. அவர்கள். அதன் பின் வ.வே.சு. ஐயர், அப்புறம் அரவிந்தர் என்று நீளுகிறது. இவர்கள் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாகிறார் பாரதிதாசன். அதன் பலன் பல இரகசிய உளவுச் செயல்களுடன் ஒன்றிப் போகிறார். அவர்களின் இரகசிய இருப்பிடங்களுக்கு உணவையும், செய்திகளையும், ஒருசேரச் சுமந்திருக்கிறார் பாவேந்தர். தமிழாசிரியராகச் சம்பாதித்த பணத்தின் பெரும்பகுதி இந்த விடுதலை வீரர்களைப் பாதுகாப்பதற்கே செலவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த தேசப்பற்றை அவர் இறக்கும் வரை எவருக்கும் சொல்லி விளம்பரம் தேட முனைந்ததில்லை. தோழர் ஜீவானந்தம், குத்தூசி குருசாமி, குஞ்சியம் குருசாமி, மயிலை சீனி வேங்கடசாமி, மாயூரம் நடராசன், சாமி சிதம்பரனார், நாரண துரைக்கண்ணன், பெரியார் ஈ.வெ.ரா. என்று பிற்காலத்தில் அவருடன் உறவாடி நின்றவர்கள் பலர் உண்டு.

வாஞ்சிநாதன் கதை இந்திய வரலாற்றின் தியாகக் கதை என்பது பலருக்குத் தெரிந்தது. ஆனால் அதன் உள்ளே உள்ள இரகசியங்கள் 'ஏராளம்'. அரவிந்தரின் தொடர்பால் உருவாக்கப்பட்ட பாரத மாதா சிலைகள் பாரதிதாசனால் வீடு வீடாக விநியோகம் செய்யப்பட்டன. அப்படியொரு சிலைக்குள்ளேயே ஆஷ்துரையின் மரணத்தை ஏற்படுத்திய துப்பாக்கியும் மறைத்து வைக்கப்பட்டது. அந்தத் துப்பாக்கியின் சொந்தக்காரர் வ.வே.சு. ஐயர். வாஞ்சிக்கு சுடப் பயிற்சி தந்தவரும் அவர் தான். பாரத மாதா சிலையுடன் திருநெல்வேலி சென்று மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை வாஞ்சியிடம் வழங்கி உதவியவரும் பாரதிதாசன்தான். அதன் பின் வாஞ்சி தற்கொலை செய்துகொள்ள அவரது உயிர் நண்பர் மாடசாமியை காவல்துறை துரத்தத் தொடங்கியது. புதுவையில் மாடசாமிக்கு அடைக்கலம் கொடுத்ததுடன், பாரதியாரின் அறிவுறுத்தலின்படி இந்தோனேசியாவின் தலைநகருக்குத் தப்பிச்செல்ல உதவியவரும் பாவேந்தர்தான். பாவேந்தர் மாறுவேடத்தில் கட்டுமரத்தின் மூலம் மாடசாமியைக் கடல் நடுவே தரித்து நின்ற கப்பலில் ஏற்றிவிட்டுத் தைரியமாகத் திரும்பினார். ஆழ்கடலில் ரோந்து சென்ற போலிசாரின் நீராவிப்படகின் கண்காணிப்பிலிருந்து தப்ப நடுக்கடலில் ஒன்றரை நாட்களாக அவர் தனியே தரித்து நின்றிருக்கிறார். அது பற்றிய தற்றுணிவையும் அவருடைய அஞ்சா நெஞ்சத்தையும் அரவிந்தர் போற்றியிருக்கிறார்.

தேசியத்தின் பால்- பெரியார்களின் தொடர்புகள்பால்- ஏற்பட்ட போராட்டங்களால்- அவர் ஒன்றேகால் ஆண்டுகள் சிறைவாசம் செய்ய நேரிட்டது. அவரது திருமண நிச்சயதார்த்தம் கூட சிறையில் நடந்தது. "நான் செய்ய வேண்டியது என்ன என்பது தான் என்னுடைய சிந்தனையே தவிர, பிறர் என்ன எண்ணுவார்கள் என்பதல்ல" என்பார். அவரது அரசியல் பிரவேசம் 1955இல் நடந்தது. புதுவை சட்டசபையின் தலைவர் ஆகிறார். தன் கருத்துச் சுதந்திரத்தில் கண்ணானவர் என்பதால் அரசியலில் கூட அவர் கடும் போக்காளராகவே கருதப்படுகிறார். எதிர்ப்புகள் எங்கிருந்து வந்தாலும் திருப்பித் தாக்கும் திடமனம் அவருக்குண்டு. பிற்காலத்தில் அவர் வாரிசாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், இன்றும் நம்முடன் வாழும் சுப்புரத்தின தாசன் என்ற கவிஞர் சுரதா ஆகியோரிடமும் கூட பாரதிதாசனாரின் இந்த பண்புகளைப் பார்க்க முடிகிறது.

1955ல் முதல்முதல் பாட்டேடாக 'சிறீ சுப்பிரமணியபாரதி கவிதா மண்டலம்' மலர்ந்தது. அதன் ஆசிரியரும் பாரதிதாசனார் தான். 1946இல் அவரது கவிதா சஞ்சிகையாக 'முல்லை' முகிழ்ந்தது. அந்த ஆண்டிலேயே 'புரட்சிக் கவிஞர்' பட்டமும் பணமுடிப்பு 25,000 ஆன பரிசில்கள் அவரைக் கௌரவப்படுத்துகின்றன. வழங்கப்பட்ட பணமுடிப்பு வெள்ளித் தட்டிலிருந்து அவர் கையாலேயே எடுக்கப்பட்டது. இன்னொருவர் கொடுக்கப் பெற்றுக் கொள்பவராக அவர் இருக்கமாட்டார் என்ற சுயமரியாதைக் கோட்பாடே இவ்வேற்பாடு என்றார் பேரறிஞர் அண்ணா. இந்தக் காலத்தில்தான் அவரது கவிதைகளின் மூன்று தொகுதிகள் வெளிவந்தன. 'பாண்டியன் பரிசு', திரைப்பட முயற்ச்சியும் நடந்தது. ஆனால் அது நிறைவேறவில்லை. பாரதியின் உறவினரும், தற்போது பாரதியார் பற்றிய முழுமையான ஆய்வுகளையும், வரலாற்று வாழ்க்கைக் குறிப்புகளையும், மூன்று பெரிய நூல்களாகத் தந்திருக்கும் மயிலை சீனி வெங்கடசாமி அவர்கள். தனது பாரதி தொகுப்பின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார். "பாரதியார் பற்றிய முழுக்குறிப்பும் வாழ்வும் தவறுகளின்றி எவ்வித தவிர்ப்புகளுமின்றி வெளிவர வேண்டுமெனவும், அவர் பற்றிய முழு நீளத் திரைப்படமொன்று உருவாக்கப்பட வேண்டுமென்றும் அவாவுற்றிருந்த பாரதிதாசனார் இன்றிருந்து என்னை வாழ்த்தியிருந்தால் என் முயற்ச்சிகளுக்குக் கிடைத்த மிகப் பெரும் வெற்றியாக எண்ணியிருப்பேன்" என்கிறார்.

பாரதிதாசனை தற்பெருமையும், முரட்டுத்தன்மையுமிக்க மனிதராக சிலர் கூறுவதுண்டு. இப்படி ஒரு செய்தியின் பின்னணியில் தான் ஒருமுறை பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவரைச் சந்திக்கப்போனார். இவரது வருகையை பாவேந்தர் எதிர்கொண்டவிதம் இவர் கண்களையே குளமாக்கியதாம். "மெழுகிய நிலத்தில் சிறு குழந்தை போல் கால்களை மடக்கி உட்காந்திருந்து அவர் அளித்த சங்க இலக்கிய தமிழ் விருந்தில் இரண்டு மணிநேரமாக என்னை மறந்திருந்தேன்" என்கிறார் பேராசிரியர். "என் வாழ்நாளில் மறக்கமுடியாத கனிவினை அங்கு கண்டேன்" என்று அ.சா.ஞா. தன் வாழ்க்கைக் குறிப்பில் நெகிழ்வாக எழுதுகிறார்.

பாரதிதாசனாரின் வாழ்நாளில் அவர் நெருங்கியிருந்த நட்புலகத்தில் மிகப்பெரிய மனிதர்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள். "பட்டதைச் செய்வேன், பகைவருக்கு அஞ்சேன், வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் பிறரைத் தூக்கி விடுவதில் சோர்ந்ததேயில்லை, படிப்புத் தந்தேன், சோறு தந்தேன், தலையெடுக்கச் செய்தேன், என் தலை தனை அவர் அறுக்க முயன்றபோதும் சிரித்தேன்" என்று அழகான வரிகளில் தன் வாழ்க்கையை விமர்சிக்கிறார் அவர். தன்னைவிட அறிவில் முதிர்ந்த பெரியவர்களிடம் ஒன்றுபட்டு வாழ்தல் ஒருவருக்குரிய வலிமைகளெல்லாம் தலையானது என்கிறார் வள்ளுவர்.

அதுதான் பாவேந்தரின் தனிவலிமை என்பதில் தவறில்லை.

"தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாம் தலை" -குறள் 444

-கோத்திரன்


JK Gold House &
Fashion House
314-316 London Road Croydon Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577 Fax : 022 8684 4677


Diamonds Palace
76 Tooting High Street London SW17 ORN
Tel : 020 8767 5333 Fax : 020 8767 5814
Mithus Jewellery
322-324 London Road Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756 Fax : 020 8683 1792